Not for sale

மார்ச் - ஏப்ரல் 2020

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



For Private Circulation only

## ஆதாரம்

- முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒரு உலகம்
- யேகோவா தேவனின் வடிவமைப்பு ஒரு லக்கி ஃப்ளுக் அல்ல
- மனித சிருஷ்டிப்புக்கான ஆதாரங்கள்
- நம்முடைய அன்றாட வாழ்வில் நோவா பேழையின் முக்கியத்துவம்
- மோசே மற்றும் நியாயப்பிரமாணம்
- இயேசுவே மேசியா
- இஸ்ரயேலின் சிதறடிப்பு மற்றும் அலியா
- சுவிசேஷ யுகத்தின் நிறைவு

ஆதாரம்

# ஆதியிலே



பரவலான அவநம்பிக்கையுள்ள யுகத்தில், கிறிஸ்தவர் தனக்கும் அவர் பேசும் நபர்களுக்கும் ஆதாரங்களால் உதவப்படுகிறார்.

"முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒரு உலகம்" மற்றும் "யேகோவா தேவனின் வடிவமைப்பு, ஒரு "லக்கி ஃப்ளுக்" (Lucky Fluke') அல்ல என்ற தலைப்பு மனிதனுக்காக பூமியை தேவன் முறையாக தயாரித்ததையும், அதை நிறைவேற்ற அவர் பயன்படுத்திய தீவிர பராமரிப்பையும் விவாதிக்கிறது. மனிதனின் தோற்றத்தை நிரூபிக்கும், அளவிற்கு அதிகமான பரிணாமக் கோட்பாடுகளுக்கு, ஆதியாகமத்தை விட, விஞ்ஞானமே இப்போது ஒரு பெரிய சவாலை முன்வைக்கிறது. "மனித சிருஷ்டிப்புக்கான ஆதாரங்கள்" என்ற தலைப்பு ஆதியாகமத்தை தவிர, மற்ற ஒவ்வொரு விளக்கத்தையும் வெளிப்படையாக நிராகரிக்கப்படும், விஞ்ஞான ஆதாரங்களின் தற்போதைய நிலையை விவாதிக்கிறது.

"நம்முடைய அன்றாட வாழ்வில் நோவாவின் பேழையின் முக்கியத்துவம்" என்ற தலைப்பு, நோவாவின் பேழைக்கான தொல்பொருள் ஆதராங்களை ஆய்வு செய்த பின்னர் அதை நம்முடைய அன்றாட வாழ்க்கையில் படிப்பினைகள் பயன்படுத்துகிறது.

தேவன் மோசேக்குக் கொடுத்த பிரமாணத்திற்கும், மனிதனின் பண்டைய கால சட்டங்களுக்கும் காணப்படும் முரண்பாட்டை "மோசே மற்றும் நியாயப்பிரமாணம்" என்ற தலைப்பு காட்டுகிறது. மனுக்குலத்தின் ஆயுட்காலம் இரட்டிப்பாக்கிய நவீன பொது சுகாதார நடைமுறைகளுக்கு இது அதின் காலத்திற்கு முப்பத்தைந்து நூற்றாண்டுகள் முன்னதாகவே காட்டப்பட்டுள்ளது.

இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் இருந்ததை உறுதிப்படுத்தும்படியாக முதல் நூற்றாண்டின் பல குறிப்புகளுடன் "இயேசுவே மேசியா" என்ற தலைப்பு துவங்குகிறது. அதன்பின், மேசியா எப்படி முன் தீர்மானிக்கப்பட்ட இஸ்ரயேலின் பஸ்கா ஆட்குக்குடியாக இருக்கிறார் என்பதையும், மற்ற குறிப்பிடத்தக்க தீர்க்கதரிசன நிகழ்வுகளையும் காண்பிக்கிறது.

இஸ்ரயேலின் சிதறடிப்புக்கான காரணங்களையும் (இஸ்ரயேலிலிருந்து உலகின் பிற பகுதிகளுக்கு சிதறடிக்கப்படுதல்),இப்போது இஸ்ரயேல் தேசத்திற்கு திரும்பும் ஐந்து அலியாக்கள் (Aliyahs) பற்றியும் "இஸ்ரயேலின் சிதறடிப்பு மற்றும் அலியா (Aliyah)" என்ற தலைப்பு காட்டுகிறது. யூதர்களின் "இரட்டிப்பு" 1878ல் முடிவடையும் என்றும், இது இஸ்ரயேலின் திரும்புவதற்கான தொடக்கத்துடன் ஒத்துப்போகிறதையும் காட்டுகிறது.

"சுவிசேஷ யுகத்தின் நிறைவு" என்ற தலைப்பு நாம் சுவிசேஷ யுகத்தின் "கடைசி நாளில்" இருப்பதற்கான ஆதாரங்களை பதிப்பாய்வு செய்கிறது. மேலும் அதைப் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறது.

வேதாகம பதிவுகளின் துல்லியத்தன்மைக்கு நம்மிடம் உள்ள ஆதாரங்களால் ஊக்கமளிக்கப்பட்டு, நம் அன்றாட வாழ்க்கையில், அதன் அறிவுறுத்தல்களை இன்னும் நம்பிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்.

ஜனவரி / பிப்ரவரி 2020, தொகுப்பு 101, எண் 5


**முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒரு உலகம்** 2
முறைப்படி மற்றும் முழுமையான

**யேகோவா தேவனின் வடிவமைப்பு ஒரு லக்கி ஃப்ளுக் (Lucky Fluke') அல்ல** 4
நீண்ட சிருஷ்டிப்பின் நாள் மற்றும் ஜலம்

**மனித சிருஷ்டிப்புக்கான ஆதாரங்கள்** 9
சகல முரண்பாடுகளுக்கும், பரவி வருகிற டார்வினிசத்திற்கும் எதிராக

**நம்முடைய அன்றாட வாழ்வில் நோவா பேழையின் முக்கியத்துவம்** 13
தொல்பொருள் சாஸ்திரம் மற்றும் நமக்கான பாடங்கள்

**மோசே மற்றும் நியாயப்பிரமாணம்** 19
அதைப் பிடிக்க நமக்கு 35 நூற்றாண்டுகள் பிடித்தன

**இயேசுவே மேசியா** 24
வரலாறு சாட்சியமளிக்கிறது மற்றும் தீர்க்கதரிசனங்கள் அவரை சுட்டிக்காட்டுகிறது.

**இஸ்ரயேலின் சிதறடிப்பு மற்றும் அலியா (Aliyah)** 28
சிதறடிப்பு அலியாவை உருவாக்குகிறது

**சுவிசேஷ யுகத்தின் நிறைவு** 33
நாம் கடைசி நாட்களில் வாழ்கிறோம், அதைக் குறித்து நாம் என்ன செய்ய வேண்டும்.

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 36
ஹாங் காங்கில் புரட்சி

முறைப்படி மற்றும் முழுமையான

# முறைப்படி தயாரிக்கப்பட்ட ஒரு உலகம்



"வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை." (ஏசாயா 45:18)

பூமி மனிதனுக்காக முறைப்படி ஆயத்தப்படுத்தப் பட்டது. இப்போது மனிதன் நித்திய ஜீவனுக்கு ஆயத்தப்படுத்தப்படுகிறான்.

ஆதியில் பூமி பயனற்றதும், உயிரற்றதுமாக இருந்தபோதிலும், தேவன் முதலில் "வானங்களையும் பூமியையும்" சிருஷ்டித்தார். இவ்வாறு முதல் சிருஷ்டிப்பின் நாள் துவங்குவதற்கு முன்னமே இந்த பூமி இருந்தது. (ஆகவே, ஆதியாகமத்திற்கு முரணாக இல்லாமல், பெரும்பாலான வானியல் இயற்பியலாளர்கள் தற்போது சொல்வது போல், வானங்களின் வயது 14 பில்லியன் வருடங்களாகவும், பூமியின் வயது 4.5 பில்லியன் வருடங்களாகவும் இருக்கலாம். ) "தேவனுடைய ஆவி பூமியின்மேல் அசைவாடும் போது", முதல் "ஆர்க்கிபாக்டீரியா" (archaebacteria) உருவாக்கப்பட்டது, அவை 600°F வெப்பம் வரையில் கூட பெருகியது. (ஆதியாகமம்1:1-2) பின்னர், சூரிய ஒளி பூமியின் திட பொருட்களின் மேல் லேசாக ஊடுருவும் படியாக, வளிமண்டலத்தை மெல்லியதாக்குவதே முதல் வேலையாக இருந்தது. ("நாள்" 1)

**2 ஆம் நாள்** ஒரு திரவ நீராவி உருவாக்க, வளிமண்டல அழுத்தம் 220 வளிமண்டலங்களுக்கு கீழ் வீழ்ச்சியடைந்தது. பின்னர் படிப்படியாக மேகங்களுக்கும் கடலுக்கும் இடையில் வானத்தை உருவாக்கியது. ஒரு புதிய வகையான நுண்ணிய ஜீவியின் சிருஷ்டிப்பைப் பற்றி அடுத்த கட்டுரையில் சம்பாஷிக்கப்படுகிறது.

**3 ஆம் நாளின் வேலை** கடலுக்கு அடியில் உள்ள திடமான பூமியை, ஒன்றுக்கும் மேற்பட்ட கண்டங்களாக தண்ணீருக்கு மேலே தள்ளியது. விலங்குகளுக்கு தேவைப்படும் புல், மூலிகைகள் மற்றும் பழ மரங்கள் இன்னும் சிருஷ்டிக்கப்படவில்லை. ஏனெனில், அவைகளே கரியமில வாயுவை, விலங்குகளுக்கு தேவையான பிராண வாயுவாக மாற்றுகிறது.

**4 ஆம் நாள்** வானத்தில் சூரியன் ஒரு வட்டாக (disk)காணும் வரையிலும், பின்னர் மெதுவாக சந்திரன் ஒரு வட்டாவை(disk) போலவும், இறுதியாக சில நட்சத்திரங்கள் ஒளியின் புள்ளிகளாகத் தோன்றும் அளவுக்கு வளிமண்டலம் தொடர்ந்து மெல்லியதாக இருந்தது. (ஆதியாகமம் 1:14-19) நேரடியாக வந்த அதிகபட்சமான சூரிய ஒளி மூலிகைகளும் மரங்களையும் வளர உதவியது.

இப்போது மீன், பறவைகள், டைனோசர்கள் போன்றவற்றுக்கு 5 ஆம் நாளில் சிருஷ்டிக்கப்பட்ட ஏராளமான தாவரங்கள் உணவளித்தது. (ஜீவனுள்ள ஆத்துமாக்கள்) புவியியலாளர்கள் கேம்ப்ரியன் காலம் என்று அழைப்பதோடு இதனை நாம் அடையாளம் காணலாம். கேம்ப்ரியன் வாழ்க்கை வடிவங்களின் வெடிப்பின் முக்கிய கட்டம் ஐந்து மில்லியன் ஆண்டுகள் மட்டுமே நீடித்ததாக கருதப்படுகிறது. இது ஐந்நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பைவிட சற்று அதிகமாகும். இந்த உயிரினங்கள், பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட பிற மாமிச உயிரினங்களுக்கு உணவாக இருந்தது. மேலும், பிராண வாயுவையும் கரியமில வாயுவையும் நடுநிலைப்படுத்திட, விலங்குகள் பிராண வாயுவை, கரியமில வாயுவாக மாற்றியது.

பின்னர் 6ம் நாளில், உணவு சங்கிலியில் (food chain)உள்ள கால்நடைகளுக்கும், பிற பெரிய விலங்குளுக்கும் மற்றும் ஊர்ந்து செல்லும் பிராணிகளுக்கும் சிருஷ்டிக்கப்பட்டது. (இவைகளும் ஜீவனுள்ள ஆத்துமாக்கள் என்று அழைக்கப்பட்டது.) இறுதியாக, உணவு சங்கிலியில் உயரத்தில், மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். அதன்பின், தேவன் மனிதனுக்கு ஒரு பொறுப்பாணையைக் கொடுத்தார். (ஆதியாகமம்1:31)

"சாயங்காலமும் விடியற்காலமுமாகி 7ஆம் நாள் ஆயிற்று" என்ற வாக்கியத்தோடு சிருஷ்டிப்பின் முதல் ஆறு நாட்கள் ஒவ்வொன்றும் முடிவடைந்தது. இருப்பினும்,

"சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஏழாம் நாள் ஆயிற்று" என்ற வாக்கியம் வரவில்லை. எனவே, தேவன் "ஏழாம் நாளில் அவர் செய்த எல்லா வேலைகளிலிருந்தும் ஓய்வெடுத்தார் என்று சொல்லப்படும் போது, (ஆதியாகமம்2:2) அவர் "புது சிருஷ்டிகளை" படைப்பதற்கு நான்காயிரம் ஆண்டுகள் வெறுமனே அவர் இடைநிறுத்தம் (simply paused)செய்ததாக கருதப்படுகிறது.

"மனிதனை தமது சாயலாகவும், தமது ரூபமாகவும்" சிருஷ்டிப்பதற்கு தேவன் தீர்மானித்தார். (ஆதியாகமம்1:26)ஆனால் அவனை "அவருடைய சாயலில்" மட்டுமே உருவாக்க துவங்கினார். (ஆதியாகமம்1:27) பின்னர் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, அவர்கள் அவருடைய ரூபத்தை பெற்றார்கள் (ஆதியாகமம்3:22) ஆனால் சாயலை இழந்தார்கள். இப்போது மனிதனை அந்த சாயலில் மீட்டெடுக்கப்பட ஒரு ஆசாரியத்துவத்தை உருவாக்குவதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் முடிந்து, இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகள் செல்லும். தேவனுடைய திட்டம் சரியான பாதையில் உள்ளது என்பதற்கான ஆதாரம்.

## நீண்ட சிருஷ்டிப்பின் நாள் மற்றும் ஜலம்

# யேகோவா தேவனின் வடிவமைப்பு ஒரு லக்கி ஃப்ளுக் (Lucky Fluke) அல்ல



- இரண்டாம் சிருஷ்டிப்பின் நாள் "பின்பு தேவன்: ஜலத்தின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக்கடவது என்றும் சொன்னார்.தேவன் ஆகாயவிரிவை உண்டுபண்ணி, ஆகாயவிரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும் ஆகாயவிரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று.தேவன் ஆகாயவிரிவுக்கு வானம் என்று பேரிட்டார்; சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று. "(ஆதியாகமம் Genesis 1:6-8)

2 ஆம் நாளின் தொடக்கத்தில் மிகவும் அடர்த்தியான மற்றும் கனமான மூடுபனி போன்ற வளிமண்டலம் ஜலத்தின் மேல் நேரடியாக அமர்ந்தது. நம்மை போன்ற ஜீவ சுவாசத்தை பெற்ற உயிரினங்களுக்கு மிக முக்கியமான மூலக்கூறாகிய பிராண வாயு oxygen இன்னும் வரவில்லை. சிருஷ்டிப்பின் முதல் நாளில், " ஆழத்தின் மேல் இருள் இருந்தது" என்றும், அதே சமயத்தில், "தேவனுடைய ஆவி ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தது" என்றும் ஆதியாகமத்தில் (1:2) பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மிக அதிகமான கனிமங்களை கொண்ட நீர், ஏற்கனவே உயிரைக்கொண்டிருந்தது என்பது அர்த்தமாகும் என்று பொதுவாக புரிந்துக்கொள்ளப்படுகிறது.

சிருஷ்டிப்பின் 2 ஆம் நாள் மற்ற எல்லா "நாட்களிலிருந்தும்" வேறுபடுகிறது. விஞ்ஞான சமூகத்தின் கண்ணோட்டத்தில் ஆறு சிருஷ்டிப்பின் நாட்களில் இந்த "நாள்" மிக நீண்ட காலமாக காணப்படுகிறது. இந்த சிருஷ்டிப்பின் வேலை ஒரு நீண்ட புவியியல் காலத்தை உள்ளடக்கியது மற்றும் சிலர் இன்னும் ஆதியாகமத்தில் உள்ள இந்த வசனங்களுக்கு நேரடியான விளக்கத்தை நம்பிக்கொண்டிருந்தாலும், இந்த நாளின் அளவு 24 மணிநேரம் அல்ல.

மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், "தேவன் அது நல்லது என்று கண்டார்" என்று மற்ற ஐந்து நாட்களின் முடிவிலும் காணப்பட்ட தேவனுடைய வாக்கியம், இந்த சிருஷ்டிப்பின் நாளின் முடிவில் காணப்படவில்லை. இதற்கான காரணத்தை பின்னர் காணலாம்.

இந்த "நாளை" குறித்த அனைத்து அம்சங்களைப் பற்றி விஞ்ஞான சமூகத்தின் தீவிரமான ஆர்வம், சிறந்த கட்டுமானரின் திறனுக்கும், வழிகாட்டுதலுக்கும் கட்டாயமான நிரூபணத்தை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது. (நீதிமொழிகள் 8:22-31) நம்முடைய அன்பான பரலோக தகப்பன் கட்டுமான வடிவமைப்பாளராகவும், அவருடைய குமாரன் "லோகோஸ்" (யோவான் 1:3) ஆகவும், மற்ற தேவதூதர்களின் சேனையுடன் முழு இணக்கத்துடன், மனிதனின் வீடு மற்றும் யேகோவா தேவனின் பாதபடியாக இருக்கும், நம் பூமியை வடிவமைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். (ஏசாயா66:1)

சிருஷ்டிப்பின் 2 ம் நாளில் குறிப்பிட்ட வேலைகளின் நிலைப்பாட்டை நன்கு புரிந்துகொள்வதற்கு, சில விரிவான அறிவியல் சிறப்பம்சங்களை ஒருமித்து ஆராய்வோம். இளைய வாசகர்கள் மீது சிறப்பான கவனம் செலுத்தி, அறிவியலை அடிப்படையாகக் கொண்டதுதான் வேதம் என்பதை நிராகரிக்கும் அணுகுமுறைகளை எதிர்கொள்பவர்களுக்காக இதை நாம் ஆராய்கிறோம். இதில் இளைய வாசகர்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. இணையத்தில், சிருஷ்டிப்பை குறித்த அறிவியலுடன் குப்பைகள் அடைக்கப்பட்டுள்ளது - எனவே வாங்குபவர் ஜாக்கிரதை ! அத்தகைய தத்துவங்களுக்கு ஒப்புதல் அளிப்பது, வேதம் மற்றும் அறிவியல் ஆகிய இரண்டுக்கும் சேதம் விளைவிக்கும். பரிசுத்தமான வசனங்களை கொண்ட புத்தகம் மற்றும் இயற்கையின் புத்தகம், இவ்விரண்டும் ஒரே ஆசிரியரைக் கொண்டுள்ளது, மேலும் இவைகள் முழு இணக்கமானவை.

ஒற்றை உயிரணுவின் (living cell) சிக்கலான அமைப்பை பார்க்கும்போது கூட, ஒரு படைப்பாளியின் நேரடியான கைவண்ணம் இதில் இருப்பதாக தோன்றுகிறது. மேலும், பாஸ்டர் ரஸ்ஸல், தி நியூக்ரியேஷனில் (The New Creation),.படைப்பு செயல்முறையின் தொடக்கத்தை பற்றி இவ்வாறு எழுதுகிறார். அந்த கடல்களின் மிகுந்த கனிம மயமாக்கப்பட்ட நீரில் நடந்த இரசாயன மாற்றங்களால், பேலியோசோயிக் (Paleozoic) காலத்தின் சேற்றில் இருந்த புரோட்டோபிளாசம் (protoplasm) கூட உருவாகியிருக்க முடியாது என்று நாம் விவாதிக்க தேவை இல்லை. அனைத்தும் தெய்வீக நோக்கம் மற்றும் ஏற்பாட்டின் விளைவாக வந்தது என்று நாம் சொல்லுகிறோம். எனவே வழிகள் எதுவாக இருந்தாலும், தெய்வீக சிருஷ்டிப்புகள்

உண்டாயின மேலும் ஆதியாகமத்தில் சொல்லப் பட்டவைகளுக்கு எதுவும் குறைவில்லாமல் இது இயற்கையின் உண்மைகளாலும் காட்டப்படுகிறது என்றும் கூறுகிறோம். (பாஸ்டர் சி. டி. ரசல், The New Creation, (1904). pages 35,36 ல் இந்த விஷயத்தைத் தாங்கக்கூடிய கூடுதலான மேற்கோள்கள், "வேத பதிவை விட அதிகமாக நாம் எதிர்ப்பார்க்க வேண்டாம் என்று கோருகிறது. எண்ணற்ற வகையான மீன் மற்றும் ஊர்வன அனைத்தையும் தேவன் தனித்தனியாக சிருஷ்டித்தார் என்று வேதம் கூறவில்லை, ஆனால் தேவனுடைய ஆவி அல்லது தெய்வீக தாக்கம் ஜலத்தின் மேல் அசைவாடும் போது, கடல் பல்வேறு வகையான உயிரினங்களை உற்பத்திச் செய்தது.... செயல்முறைகள் அறிவிக்கப்பட வில்லை - ஒரு இனம் வெவ்வேறு நிலைமைகளின் கீழ் மற்றொன்றாக உருவாக்கட்டிருக்கலாம். அல்லது ஒரே அசல் புரோட்டோபிளாஸிலிருந்து original protoplasm வெவ்வேறு வகையான உயிரினங்கள் மாறுபட்ட நிலைமைகளின் கீழ் வளர்ந்திருக்கலாம். எந்த மனஷனுக்கும் இது தெரியாது, அதிகாரப்பூர்வமாக கூறுவது விவேகமற்றதாக இருக்கும்."

நெருக்கடியான உயிரியல் வளர்ச்சிகளைப் பற்றிய விவரங்களைத் தொடர்வதற்கு முன், 2 வது சிருஷ்டிப்பின் உயிரற்ற ஜீவிகளின் அம்சங்களை சுருக்கமாக ஆய்வு செய்வோம்.

### 3 ஆம் நாள் வரை கண்டங்கள் இல்லை

2 ஆம் நாள் வரையில் கண்டங்கள் தோன்றவில்லை. மேற்பரப்பில் இருந்து கரிமச்சத்து பொருட்கள் (Carbonaceous materials) 400 மைலுக்கும் (640 கி.மீ) அதிகமாக செங்குத்தாக கீழ்நோக்கி கொண்டு செல்லப்படும், அதற்கு பின் அரிதான மற்றும் அழகான வைரங்களை விளைவித்து, மீண்டும் மேற்பரப்புக்கு கொண்டுவரப்பட்டது. கடல் மேற்பரப்புக்கு மேலே கண்டங்களை உயர்த்துவதற்காக கண்டங்களின் எடையை தாங்க முடியாத அளவிற்கு கவசம் (மேன்டில் mantle) அதிக சூடாக இருந்தது. வேதம் குறிப்பிடுவதைப் போல, நாம் புரிந்திருக்கிறபடி, கண்ட நிலப்பரப்பு என்று பொருள்படும், "வறண்ட நிலம்" 3 வது சிருஷ்டிப்பின் நாள் வரை தோன்றவில்லை. (ஆதியாகமம் 1:9)இரண்டாம் நாளில் பிளேட் டெக்டோனிக்ஸ் (plate tectonics) கோட்பாட்டின்படி நடந்தது. மேலும் மூன்றாம் நாள் தொடக்கத்தில் மேண்டலில் புழக்கத்தின் வெப்பச்சலன விசை (Convective Forces) செங்குத்திலிருந்து கிடைமட்டத்திற்கு தன் திசையை மாற்றி நகரும்.

இந்த சிருஷ்டிப்பின் நாளின் கிட்டத்தட்ட ஒவ்வொரு அம்சத்தை போலவே, விஞ்ஞான சமூகம் ஒரு இதமான விவாதத்தை தொடர்கிறது. ஆனால் ஒரு காலத்தில் ஜலம் பூமியை மூடியிருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறது. கண்டங்களின் மேலுள்ள வளர்ச்சியைப் பற்றிய வரலாறு நிச்சயமற்றது, மற்றும் படிப்படியாக, வீழ்ச்சியுறும் அல்லது படிப்படியான செயல்முறையை உள்ளடக்கியுள்ள பல்வேறு மாதிரிகள் முன்மொழியப்பட்டுள்ளது. சுமார் ஒரு பில்லியன் முதல் மூன்று பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வரை என்று மதிப்பீடுகளுடன் உள்ள கடலுக்கு மேலே பெரும்பாலான நிலப்பரப்புகள் ( துணை வான்வழி நிலப்பரப்புகள்) தோன்றிய நேரத்தைப் பற்றியும் நிலப்பரப்பின் போக்கைப் பற்றியும் இன்னும் நிச்சயமற்றதாக இருக்கிறது.

### ஜலத்தை ஜலத்திலிருந்து பிரித்தல்

வளிமண்டலத்தின் பெரிய மாற்றங்களால், ஜலத்தினின்று ஜலம், பிரிந்ததைப்பற்றி ஆதியாகம புத்தகம் பேசுகிறது. ஆகாயத்தின் மேகங்களிலும், பூமியின் மேற்பரப்பிலும் நீர் சேர்ந்து, வளிமண்டலத்தின் விரிவாக்கம் உருவாகியது. சில அற்புதமாக செயல்படுத்தப்பட்ட புவியியல் ஆய்வுகள், திடமான பாறையின் பதிவிலிருந்து வளிமண்டலத்தைப் பற்றிய இந்த விவரத்தை எடுக்க முடிந்தது!

எதிரான சூழலில், 2 ஆம் நாள் தொடக்கம் - அப்போது பிராண வாயு இல்லை. நாம் சுவாசிக்க முடியாது. இந்த நாள் தொடங்கியவுடன், வளிமண்டல அழுத்தம் 300 ஆக இருந்திருக்கலாம் அல்லது இன்று இருப்பதைப் போல மிக அதிகமாகவும் இருந்திருக்கலாம். நாம் நசுக்கப்படுவோம். கடலில் ஏராளமான ஜீவன் இருந்தது, ஆனால் அடர்த்தியான வளிமண்டலம் வரையறுக்கப்பட்ட ஒளியை மட்டுமே அனுமதித்தது. நீண்ட காலத்திற்கு முன்பே சூரியன் சிருஷ்டிக்கப்பட்டது, ஆனால் 4 ஆம் நாள் வரை அதன் முழு வெளிச்சத்தை பூமியின் மேல் பிரகாசிக்கவில்லை. அதிகமாக கதிரியக்கத் தன்மையைக் radioactive கொண்ட உலோக உப்புகளினால் கடல் நிரப்பட்டிருந்தது. துருவப் பகுதிகளில் பனிக்கான சான்றுகள் இருந்தபோதிலும், கடலின் பெரும்பகுதிகளில், கடல் வெப்பநிலை கிட்டத்தட்ட 160°F (70°C) ஆக இருந்தது.

வளிமண்டலத்தின் அழுத்த மாற்றம், புவியியல் பதிவை விளக்குபவர்களுக்கு சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. - 100 க்கும் மேற்பட்ட காரணிகளால் இது வேறுபடுகின்றது. இருப்பினும், ஆதியாகமத்தின் மேற்பரப்பு அடிப்படையிலான பதிவுகள், வளிமண்டல

அழுத்தம் அத்தகைய மறுசீரமைப்பை உருவாக்குவது சாத்தியமாக்கியது. (இந்த முடிவுகள், அதிக வளிமண்டல அழுத்தத்திற்கான புவி இயற்பியல் சமூகம் குறைந்தது, தற்போதைய அழுத்தம் 100 மடங்கு மதிப்பீடுகள் சாதகமாக உள்ளது. இயற்பியல் சமூகத்தில் உயர் வளிமண்டல அழுத்த மதிப்பீடுகளான, தற்போதைய அழுத்தத்தை விட நூறு மடங்கு அதிகம், என்பதோடு இந்த முடிவுகள் சாதகமாக இருக்கின்றன. மேலான ஆய்வின் மூலம், கிரக அறிவியல் சமூகத்தால் விரும்பப்படும் 300 வளிமண்டங்களின் அழுத்தம், சிறந்த மதிப்பீடாக அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

**எப்படிப்பட்ட வாழ்க்கை?**

சில குறுகிய வருடங்களுக்கு முன் அதாவது 1960 களில், ஆழமான கடல் எரிமலை துவாரங்களின் ஆராய்ச்சி, முதல் சிருஷ்டிப்பின் நாளில், உள்ள உயிரினங்களுக்கு ஒளி தேவைப்படவில்லை என்பதை விஞ்ஞான சமூகம் புரிந்துகொள்ள வழிவகுத்தது. உண்மையில், பூமியில் வாழும் பெரும்பகுதி, ஒளி இல்லாமல், பூமியின் ஆழத்தில் இருக்கும் வேதியியல் பொருட்களை உண்டு வாழ்கிறது என்பதை இப்போது விஞ்ஞான சமூகம் அங்கீகரிக்கிறது.

சிருஷ்டிப்பின் நாட்களுக்கான புவியியல் நேரம் மிக நீண்ட காலம் போல் தோன்றியதை பாஸ்டர் ரசல் முன்மொழிந்தார். அதன் அளவு 24 மணி நேரத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று வேதாகமத்தை நம்பும் சிலருக்கு அவர் சவால் விடுத்தார். நாம் காண்கிறபடி இரண்டாம் நாளில், பல்வேறு வகையான உயிரினங்கள், சரியான நேரத்தில் வரும்படியாக தோற்றுவித்த தேவனை அவர் பாராட்டினார். "பரிணாமத்திற்கும் வேதாகமத்திற்கும் இடையிலான முரண்பாடு துல்லியமானது. ஆயினும் கூட, தேவையற்ற உராய்வு உருவாக்கப்பட்டுள்ளது. தேவனின் நேரடியான படைப்பு என்று மனிதனை குறித்து மாத்திரமே வேதம் கூறுகிறது. இது புது சிருஷ்டி தொகுதியில் அவர் முன்வைக்கும் நிலைப்பாடுகளுடன் முற்றிலும் ஒத்துப்போகிறது. ஏற்கனவே மேற்கோள் காட்டப்பட்டும் உள்ளது. "வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளுக்கு மேலாக நாம் விவாதம் செய்யாமல் இருப்போமாக."

உயிரின் ஒரு களம் பாக்டீரியாவைக் கொண்டிருந்தது. ஆனால் பாக்டீரியாவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதான, மெதுவாக வளர்ந்ததான உயிரின் இரண்டாவது களம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த உயிர் வெற்றிகரமாக ஆய்வகத்தில் உருவாக்கப்பட்டு, ஆகஸ்ட் 2019இல் அஸ்கார்ட் - ஆர்க்கியா (Asgard-Archea) என்று பெயரிடப்பட்டது. பாக்டீரியாவைப் போலவே, ஆர்க்கியா உயிரினங்களும் Archea domain of life மொத்த இருளில், பிராண வாயுவுக்கு பதிலாக ரசாயனங்களைப் பயன்படுத்தி வாழ்கிறது. பாக்டீரியாக்கள் தங்களின் எண்ணிக்கையை ஒரு மணி நேரத்தில் இரட்டிப்பாக்கும், ஆனால் ஆர்னக்கியா உயிரினங்கள் இரட்டிப்பாக 20 நாட்கள் தேவைப்படுகிறது.

மரபணு பொறியியலில், பரலோக சேனைகளின் திறன் நம்முடைய தற்போதைய தடுமாறும் முயற்சிகளை விட அதிகம் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். இரண்டு ஒற்றை அணு உயிரினங்களோடு இந்த அற்புதமான பணி முடிவடையவில்லை. ஆர்க்கியா மற்றும் பாக்டீரியா இரண்டும் இப்போது ஒரு அணுவாக ஒரே சவ்வுக்குள் கூட்டுசேர்ந்தன. இரண்டுமே தங்கள் சொந்த டி. என் ஏ DNA வைப் பராமரித்தனர் மற்றும் அவர்கள் சிறப்பாகச் செய்வதில் நிபுணத்துவம் பெற்றார்கள். எனவே 1 வது நாளில் முற்றிலும் மாறுபட்ட ஒற்றை செல் உயிரினத்தின் களங்கள் உருவாக்கப்பட்டன, ஆனால் அவை 2 ஆம் நாளில் கூட்டு சேர்ந்தன. உண்மையில் இது விஞ்ஞானத்தின் பார்வையில் ஒரு அரிய நிகழ்வாக இருந்தது.

டாக்டர் லின் மார்குலிஸ் என்பவர், தொடக்கத்தில் இருந்த இந்த உயிரினங்களில் ஆராய்ச்சியை தனது பணியாக கொண்டிருந்தார். பல்வேறு எதிர்ப்புகளை தாண்டி, 1960களில், தொடக்கத்தில் இருந்த பல வகை உயிர்கள் ஒன்று சேர்ந்ததினால் தான் பூமியில் உள்ள மிக முக்கியமான உயிரணுக்கள் உருவாகின என்ற கோட்பாட்டை நிரூபித்தார். (9) மிகவும் சிக்கலான, ஒருங்கிணைந்த அமைப்பை கொண்ட ஒற்றை உயிரணுவின் படைப்புதான், பூமியுள்ள மற்ற உயர்ந்த உயிர்கள் உருவாவதற்கு உதவியாக இருந்தது என்று அவர் கூறுகிறார் - எல்லாவற்றையும் தாவரங்களாகவும் விலங்குகளாகவும் ஒன்றாக இணைப்பது, பணியின் சிக்கலை சற்று குறைத்தது! மனிதனுக்கு உணர்ச்சி கொடுக்கும் கடினமான பணிக்கு அடுத்த கடினமான பணி ஒற்றை உயிரணுவை படைத்தல். அதுவும் ஒரு முறை அல்ல, இரண்டு முறை - பாக்டீரியா மற்றும் ஆர்க்கியா (Bacteria and Archea). இது முதலாம் சிருஷ்டிப்பின் நாளிலே படைக்கப்பட்டுவிட்டது. அது நன்றாக இருந்தது ஒரு உயிரணு வேலை செய்யும் நுட்பத்தின் அற்புதத்தை பார்க்கும் போது, இன்றைய நவீன நகரின் கட்டமைப்பு மிகவும் எளிமையானதாக தோன்றுகிறது.

இந்த இரண்டு களங்களுக்கிடையில் ஒரு கூட்டு உருவாகியது. ஆர்க்கியா டி. என். ஏ செல்லின் கருவையும் (cell nucleus) செல்லின் பாதுகாப்பு சுவரையும் (Cell wall) உருவாக்கியது. செல்லுக்குள் இணைக்கப்பட்ட பாக்டீரியா

மைட்டோகாண்ட்ரியா (Mitochondria) ஆனது. இவ்வாறு மைட்டோகாண்ட்ரியா செல் ஊட்டச்சத்துக்கள் (Cell Nutrients) சூழ இருந்தது, அது மைட்டோகாண்ட்ரியாவின் ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்தது. இதற்கு பதிலாக மைட்டோகாண்ட்ரியா செல்லுக்கு அதிகமான ஆற்றலை வழங்கியது. இன்று நாம் இந்த புதிய உயிர் வகையை யூகாரியோட்டுகள் (Eukaryotes) என்று அழைக்கிறோம். ஒவ்வொரு தாவரமும் விலங்கும் யூகாரியோட் செல்களால் உருவாயிருக்கின்றன.

2 ம் நாளின் சிருஷ்டிப்பின் வேலைகள் இங்கு முடிவடையவில்லை. யூகாரியோட்டுகளின் eukaryotes பிறப்புடன், நாம் ஆல்கா (Algae) அல்லது பாசிகள் என்று அழைக்கும் ஒற்றை அணு தாவரங்கள் அடுத்த சிருஷ்டிப்பாக இருந்தது. ஒளிச்சேர்க்கையின் வழியாக பாசிகளாகிய யூகாரியோட்கள் , சூரிய ஒளியை சர்க்கரையாக மாற்றி பிராண வாயுவை வெளியிட்டது. பூமியில் உள்ள ஜீவனுக்கு இது எவ்வளவு முக்கியமானது என்பதை இப்போது கருத்தில் கொள்ள வேண்டும்.

சூரியனின் வெப்பமயமாதல் - உயிர்களுக்கு ஒரு நெருக்கடி சரிந்து வரும் ஹைட்ரஜன் வாயு சூரியனை உருவாக்கி அதன் வாழ்வை ஒரு நட்சத்திரமாகத் தொடங்கியபோது, சூரியனிலிருந்து வெளிவந்த ஆற்றல், தற்போதைய ஆற்றலில் 70% ஆக இருந்தது. இருப்பினும், இரண்டாம் நாளின் போது ஒரு நெருக்கடி ஏற்பட்டது. முதிர்ச்சியடைகின்ற சூரியனிலிருந்து வெளிவரும் வெளிச்சமும் வெப்பமும் வேகமாக அதிகரித்துக்கொண்டிருந்தது. நாம் நெருப்பைப்பற்றி புரிந்திருக்கும் வகையில் சூரியன், "எரியாது" - மாறாக, அணுக்கரு இணைவினால் (nuclear fusion reaction) நட்சத்திரங்கள் பிரகாசிக்கின்றன, இது ஒரு ஹைட்ரஜன் குண்டில் நாம் காணும் அற்புதமான ஆற்றலைப் போல் இருக்கும். ஹைட்ரஜன் அணுக்கரு இணைவின் விளைபொருள் தான் லேசான ஹீலியம். சூரியனில் ஹீலியம் குவிந்ததால், ஒரு புதிய அணுக்கரு இணைவு வரிசை துவங்கியது. இது சூரியனின் ஆற்றல் வெளியீட்டை தற்போதைய நிலைக்கு அருகில் கொண்டு வந்தது. இன்று இந்த சூரிய ஆற்றல் வெளியீடு இன்னும் அதிகரித்து வருகிறது. ஆனால் மிக மெதுவாக இரண்டாம் நாளில் பூமியின் உயிர்களுக்கு ஏற்பட்ட மிகப் பெரிய நெருக்கடிகளில் ஒன்று, கடலையே கொதிக்க வைத்திருக்கும் கிரீன்ஹவுஸிலிருந்து அது மயிரிழையில் தப்பியது தான். தேவனின் வடிவமைப்பால், இந்த பேரழிவைத் தடுக்க சரியான நேரத்தில் ஆல்காக்கள் உருவாக்கப்பட்டன. ஆல்கா கார்பன் டை ஆக்சைடை வளிமண்டலத்திலிருந்து எடுத்துக்கொள்கிறது. இதனால் ஆல்காக்களின் உருவாக்கம் கிரீன் ஹவுஸைக் குறைத்தது. இந்த நெருக்கடியை பற்றி முதன்முதலில் பேசியபோது, ஒரு பிரபலமான அறிக்கை நாசாவின் டாக்டர் மைக்கேல் ஹார்ட்டை மேற்கோள் காட்டி, சரியான நேரத்தில் ஆல்காவின் தோற்றம்"ஒரு அதிர்ஷ்டமாக தற்செயலாக நடந்த காரியம்" "a lucky fluke."என்று கூறியது.

பெருங்கடல்களிலும் நிலத்திலும் உள்ள சிக்கலான அமைப்பை கொண்ட உயிர்களை பார்க்கும்போது, தாவரங்கள் தனக்கு மட்டுமல்ல, கூடுதலாக, அனைத்து விலங்கினங்களையும் ஆதரிக்கிறது என்பதைக் காணலாம். "ஆக்ஸிஜனை வெளியிட்டு, கார்பன் டை ஆக்சைடு மற்றும் தண்ணீரை சர்க்கரையாக மாற்றும் சிக்கலான அதிக ஆற்றல்

**தேசைக்கடுனிணு** ஒளிச்சேர்க்கை என்ற செயல் முறை, ஆல்காக்கள் உயிர்வாழ தேவையான அளவைவிட அதிகமாக நடந்ததின் காரணம் என்ன" என்ற கேள்வி உயிரியல் சமூகத்திற்கு இன்றும் புதிராக இருக்கிறது. இதற்கு சுருக்கமான பதில் என்னவென்றால், வடிமைப்பால் தாவரங்கள் ஆக்ஸிஜன் சுவாசிக்கும் விலங்குகளுக்கு வளிமண்டலத்தைத் தயாரித்து, அவற்றிற்க்கு உணவும் வழங்கின. சுற்றுச் சூழலை மாற்றியமைக்க உயிர்கள் மற்ற உயிர்களுடன் ஒத்துழைப்புடன் செயல்படுவது போல் தோன்றுகிறது. இதனால் அது உயிர்கள் தொடர்ச்சியாக வாழும் சாதகமான நிலை அழியாமல் பார்த்துக்கொள்கிறது. இது முக்கிய கருதுகொள் என்று அழைக்கப்படுகிறது. (11) இது ஒரு படைப்பு வடிவமைப்பு அளவுருவாகத் தோன்றுகிறது. (படத்தை காண்க)

இரண்டாம் நாள் முழுவதும், ஆக்ஸிஜனைச் சார்ந்த யூகாரியோட்டுகளுக்கும், ஆக்ஸிஜன் தங்களுக்கு நச்சாய் இருந்த மற்ற உயிர்களுக்கும் இடையே போராட்டம் இருந்தது. 12. இரண்டும் கடல்களில் ஆதிக்கம் செலுத்த விரும்பியது. சில நேரங்களில் ஆக்ஸிஜனை விரும்பும் உயிர்கள் பூமியில் ஆதிக்கம் செலுத்தியது. ஆனால் சற்று பின்னரே ஆக்ஸிஜனை வெறுக்கும் உயிர்கள் உயர்ந்து ஆதிக்கம் செலுத்தும். இரண்டாம் நாளில் வைக்கப்பட்ட உலகின் இரும்பு வளம், இந்த போராட்டத்தின் ஒரு அற்புதமான சான்றாக இருக்கிறது. கருப்பு இரும்பு தாதுவின் ஒரு மெல்லிய அடுக்கு ஆக்ஸிஜன் குறைந்த வளிமண்டலத்தை காண்பிக்கும், அதன் மேலே, சிவப்பு இரும்புத் தாதுவின் அடுத்த மெல்லிய அடுக்கு ஆக்ஸிஜன் நிறைந்த வளிமண்டலத்தைக் காண்பிக்கும். இதற்கு மேல் மற்றொரு ஆக்ஸிஜன் குறைந்த மெல்லிய

அடுக்கு காணப்படும். ஆக்ஸிஜன் நிறைந்த வளிமண்டலம் ஆதிக்கம் செலுத்தி, மேலிருந்த ஜலத்திலிருந்து கீழிருந்த ஜலம் பிரிந்து வானத்தின் ஒரு நிரந்தர அம்சமாக மாறுவதற்கு முன், இந்த நிகழ்வு பல முறை மாறி மாறி நடந்தது. வளிமண்டலத்தில் அதிகமாக இருந்த கனமான கார்பன் டை ஆக்சைடை கடல் தரையில் தேங்கியுள்ள கனிமங்களாக உயிர்கள் மாற்றியது. இதனால், வளிமண்டல அழுத்தம் குறைந்தது.

**இரண்டாம் நாள் நல்லதாக இருந்ததா?**

ஆதியாகமத்தில் கூறப்பட்டுள்ள இரண்டாம் நாளில் வளிமண்டலத்தில் நடந்த பெரிய மாற்றங்களைப் பார்க்கும்போது, படைக்கும் செயல்முறையை கவனமாக வடிவமைத்து செயல்படுத்தியதற்கு நாம் நன்றி என்ற உணர்வை மாத்திரமே தேவனுக்கு காட்ட முடியும். வளிமண்டலத்தை மாற்றியமைக்க ஆல்காக்கள் சரியான நேரத்தில் பூமியில் வந்தது. ஒரு " அதிர்ஷ்டமாக தற்செயலாக நடந்த காரியம்" அல்ல. இந்த சாதனையின் "நல்லது", என்று கொண்டாடப்படவில்லை என்று நாம் யூகிக்க மாத்திரமே முடியும். இந்த வேதனையான நாளில் உயிர் பிழைத்திருந்தாலே போதும் என்றிருந்தது. (ஆசிரியரின் குறிப்பு - மழை மற்றும் கடல் அலை நீர் பிற்காலத்தில் பெரும்பாலான உயிர்களை அழிக்கப் பயன்படுத்தப்பட்டதால், இரண்டாம் நாள்" நல்லது" என்று அழைக்கப்படவில்லை (ஆதியாகமம் 6: 7, 7:11)) .

## அறிவியலுக்கு எதிராக பல விஞ்ஞானிகள்

# மனித சிருஷ்டிப்புக்கான ஆதாரங்கள்

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." (ஆதியாகமம் 1:27)



*Ernest Kuenzli*

சார்லஸ் டார்வின் காலத்திலிருந்து விஞ்ஞான மற்றும் மத சமூகங்களுக்கு இடையிலான விவாதங்களில் ஒன்று : மனிதன் எவ்வாறு உருவானான். முதலில் ஆணும் பெண்ணும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்ற வேதப்பூர்வ பதிவை பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். "பின்பு தேவன் : நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதியாகமம் 1:26) "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்." (ஆதியாகமம் 2:7)

விஞ்ஞான சமூகத்தில் பலர் ஆதியாகமத்திற்கு எதிராக, டார்வினுடன் துவங்கி, தெய்வீக அல்லது ஞானமான மேற்பார்வை இல்லாமல், குரங்கு குடும்பத்திலிருந்து மனிதன் "காணாமல் போன இணைப்பின்" மூலம் உருவான ஒரு கோட்பாட்டை உருவாக்கினார்கள். பரிணாமப் பார்வை உயிரியியல் பாடப்புத்தகங்களில் நிறைவேறின கூற்றுப்போல ஆதிக்கம் செலுத்தியது. மாறாக அது நிரூபிக்கப்படாத கோட்பாடாகும். இருப்பினும், சமீபத்திய வரலாற்று மற்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் இரண்டுமே பரிணாம வளர்ச்சிதான் மனிதனின் தோற்றம் என்பது செல்லுபடியாகும் என்பதைக் குறித்து கடுமையான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

### மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கான வரலாற்று சவால்கள்

உதாரணமாக, "மெசப்படோமியாவின் பூர்வக்காலக் குடிமக்களும்.. எகிப்து, கிரீக் மற்றும் ஆசியா மைனரின் பூர்வக்கால மக்களும் உண்மையில் ஒரு நாகரிகத்தைக் கொண்டிருந்தனர், இது ஐரோப்பாவை விட நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது, மேலும் உண்மையில் இன்றைய நம்முடையவற்றுடன் மிகவும் சாதகமாக ஒப்பிடப்படுகிறது. ஒரு முன்னணி பரிணாமவாதி, பேராசிரியர் ஜான் ஆர்தர் தாம்சன் இவ்வாறாக எழுதினார், "நவீன ஆராய்ச்சி மிருகத்தனமான, மந்தமான, காமவெறி மற்றும் போர்க்குணமிக்கவனாக இருந்த ஆதி மனிதன் படத்திலிருந்து விலக்கி நம்மை வழிநடத்துகிறது. ஆதி மனிதனை புத்திசாலி, கனிவான, தாராளமான மற்றும் புதுமையானவராகக் கருதுவதற்கு அதிக நியாயமான காரணங்கள் உள்ளது.

இந்த அவதானிப்புகள் (observations)முதல் மனுஷனான ஆதாம் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டார் என்ற வேதாகமப் பதிவை ஆதரிக்கிறது. "அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது." (ஆதியாகமம் 1:31) மேலும் வேதாகமம் கூறுவது யாதெனில், ஆதாமைத் தொடர்ந்து எட்டாவது தலைமுறையான யூபால், "கின்னரக்காரர் நாகசுரக்காரர் யாவருக்கும் தகப்பனானான்."(ஆதியாகமம் 4:21) மற்றும் "தூபால் காயீன்.. அவன் பித்தளை இரும்பு முதலியவற்றின் தொழிலாளர் யாவருக்கும் ஆசாரியனானான்." (ஆதியாகமம் 4:22) - ஆதி மனிதர்களுக்கு குறிப்பிடத்தக்க திறன்கள் இருந்தன என்பதற்கான சான்றுகள்.

### அறிவுறுத்தல்

மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கான அறிவியல் சவால்கள்

மனிதன் உருவான கருத்துக்கு பல அறிவியல் சவால்கள் உள்ளன. ஒன்று ஜனத்தொகைக்கு தொடர்புடையதாக உள்ளது -"மனிதன் நூறாயிரக் கணக்கான ஆண்டுகளாக பூமியில் இருந்திருந்தால்... இன்று கிரகம் ஏன் குறைவாக மக்கள் தொகை கொண்டிருக்கிறது ?....யாக்கோபின் நாளிலிருந்து முப்பத்தெட்டு நூற்றாண்டுகளில் இஸ்ரயேல் தங்கள் மக்கள் தொகையை இருபத்தி இரண்டு மடங்காக இரட்டிப்பாக்கியுள்ளனர்." இந்த அதிகரிப்பு விகிதத்தின் அடிப்படையில்," வேத வசனங்களால் ஒதுக்கப்பட்ட 6,000 க்குப் பதிலாக 7,000 ஆண்டுகளாக மனிதன் பூமியில் இருந்திருந்தால் என்று வைத்துக்கொண்டால், இப்போது இருக்கும் வெறும் 6,000,000,000 (இப்போது 8 பில்லியன்?)

க்கு பதிலாக 137,000,000,000 மக்கள் இங்கு வாழ வேண்டும்... மனிதன் இந்த பூமியில் 50,000 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக பெருகிக் கொண்டிருக்கிறான் என்றால், ஏன் இன்று உலகில் ஆறாயிரம் மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை இல்லை ? பரிணாம வளர்ச்சியிடம் திருப்திகரமாக பதில் இல்லை.

எந்தவொரு வழிகாட்டுதலோ வடிவமைப்போ இல்லாமல், தற்செயலாக மேலும் சிக்கலான உயிரினங்கள் உண்டாயின என்ற எண்ணத்திலிருந்து இரண்டாவது சவால் வருகிறது. ஒரு ஒற்றை உயிரணுக்கு தேவையான அனைத்து அமினோ அமிலங்களையும் பின்னர் புரதங்களையும் உருவாக்கும் ஒரு சிறந்த ஆதிகால மண்ணுக்கான வாய்ப்புகள்,"1041,000 இல் 1 பங்கே என்று மேயர் கணக்கிடுகிறார். மேலும் அந்த புரதங்கள் அனைத்தையும் சில உயிரணு சவ்வுக்குள் பெறுவதற்கான தற்சார்பான (தொடர்பற்ற) வாய்ப்பு, வெப்ப இயக்கவியலின் இரண்டாவது விதியை மீறும். "இன்னும் அதிநவீன ஆய்வுகள், முரண்பாடாக சீரற்ற பிறழ்வு மற்றும் இயற்கையான தேர்வு உண்மையில் கடுமையான அதிகாரப் பகிர்வு என்பதை நிரூபிக்கின்றன" என்று பெஹேகாட்டுகிறார்.

மூன்றாவது சவால் டி. என்.ஏ (DNA)உடன் தொடர்புடையது. "மைட்டோகாண்ட்ரியல் டி. என். ஏ (எம்.டி.டி.என்.டி mt DNA) தாயிடமிருந்து மகளுக்கு, மகளுக்கு முதலாக அனுப்பப்பட்டது) மற்றும் ஒய் (Y) குரோமோசோமின் பகுதிகள் (தந்தையிடமிருந்து மகனுக்கு, மகனுக்கு முதலாக அனுப்பப்பட்டது) ஆகியவற்றில் சிறிய மாற்றங்களை அளவிடுவதன் மூலம் முன்னோர்களின் தோராயமான அளவீடு சாத்தியமாகும். எம் . டி. டி. என் ஏவை வரிசைப்படுத்துவன் மூலமும் இன்று உலகில் உள்ள அனைத்து பெண்களும் ஒரு பெண்ணிலிருந்து - ஒரு பொதுவான பெண் மூதாதையரிடம் இருந்து வந்தவர்கள் என்று அறிவிப்பதன் மூலம் 1987 ஆம் ஆண்டில் கேன், ஸ்டோனெக்கிங் மற்றும் வில்சன் பரிணாம வளர்ச்சி உலகத்தை திடுக்கிட்டனர். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு டோரிட், ஆகாஷி மற்றும் கில்பர்ட் ஒய் குரோமோசோமின் ஒரு பகுதியை வரிசைப்படுத்தி, இன்று உலகில் உள்ள எல்லா மனிதர்களும் ஒரு பொதுவான ஆண் மூதாதையரிடமிருந்து வந்தவர்கள் என்று முடிவு செய்தனர். "5ம் ஆதிகாரம்" இந்த இரண்டு பொதுவான மூதாதையர்களை ஏவாள் மற்றும் நோவா என்று பெயரிடுகிறது.

இந்த மூதாதையர்களின் வயது குறித்து, "சமீபத்தில் அளவிடப்பட்ட எம்டிடிஎன்ஏ பிறழ்வு விகிதங்களிலிருந்து (~ 2x10 -6பிறழ்வு/ அடிப்படை - ஜோடி ஆண்டு), கிப்பன்ஸ் "புதிய கடிகாரத்தைப் பயன்படுத்தி... "மைட்டோகாண்டரியல் ஏவாள்" ஐக் கவனிக்கிறார்..... அவள் வெறும் 6,000 ஆண்டுகள் பழமையானவள் என்று." "பெரும்பாலான டி.என்.ஏ ஆய்வுகள், மிகச் சமீபத்திய பொதுவான ஆண் மூதாதையர் மிகச் சமீபத்திய பொதுவான பெண் மூதாதையரை விட மிகச் சமீபத்தியவை என்று கூறுகின்றன. நோவா ஏவாளை விட மிக அண்மையில் இருப்பதற்கு இது ஒத்துப்போகிறது. எந்தவொரு பரிணாமக் கோட்பாட்டையும் விட டி.என்.ஏ டேட்டிங் ஆதியாகமத்துடன் அதிகம் சார்புற்றிருக்கிறது." (டான் வேத மாணவர் ஐக்கிய சபை," சிருஷ்டிப்பு."நியூயார்க் - டான் வேத மாணவர் ஐக்கிய சபை, 2010, (பின் இணைப்பு1, பக்கங்கள் 90-91) நோவாவின் மூன்று மருமகள் அனைவரும் நோவாவின் மனைவியிடமிருந்து வந்தவர்கள் அல்ல.)

இறுதியாக, மனிதனின் பரிணாம வளர்ச்சியின் புதைபடிவ பதிவின் பற்றாக்குறை, மனிதனின் திறன்களுக்கும் முந்தைய பாலுட்டிகளின் திறன்களுக்கும் இடையிலான பரந்த இடைவெளியுடன் இணைந்து, தேவனும் அவருடைய ஒரே மகனான லோகோசும் முதல் ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்தார்கள் என்ற வேதாகமப் பதிவை ஆதரிக்கிறது. "ஆச்சரியப்படுவதற்கில்லை, கிழக்கு ஆப்பிரிக்காவில் பழங்கால ஆராய்ச்சியாளர்கள் ரிச்சர்ட் லீக்கி மற்றும் டொனால்ட் ஜான்சன் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஜாக்கிரதையான ஆராய்ச்சிகள் இருந்தபோதிலும், பரிணாம பதிவில் இடைவெளிகள் உள்ளன, அவற்றில் சில 4 முதல் 6 மில்லியன் ஆண்டுகள் வரை நீடிக்கின்றன. உதாரணமாக, நவீன வாலில்லா குரங்குகள் திடீரென எங்கிருந்தோ தோன்றின. அதற்கு நேற்று இல்லை, புதைபடிவ பதிவுகளும் இல்லை. நவீன மனிதர்களின் உண்மையான தோற்றம் -- நேர்மையான, நிர்வாணமான, கருவி தயாரிக்கும், பெரிய மூளை கொண்ட மனிதர்களின் - நாம் நம்முடன் நேர்மையாக இருக்க வேண்டுமென்றால், ஒரு சமமான மர்மமான விஷயம்."லியால் வாட்சன், "தி வாட்டர் பீப்பிள், சயின்ஸ் டைஜஸ்ட்90, 5, பக்கம்44 (மே1982)

மனிதனின் மேம்பட்ட திறன்கள் -- சுருக்க (நுண்ணிய) சிந்தனை மற்ற விலங்குகளுடன் ஒப்பிடும் போது மனிதனின் மேம்பட்ட திறன்கள் அவர் ஒரு சிருஷ்டிக்கப்பட்ட உயிரினம் என்பதை நிரூபிக்கின்றன. அவற்றில் மிக முக்கியமான ஒன்று சுருக்க (நுண்ணிய) சிந்தனையைச் செய்வதற்கான அவரது திறன். இந்த

திறன் மனிதன் தனது சூழல், நடத்தை மற்றும் அவர் தொடர்பு கொள்ளும் பிற உயிரினங்களைப் பற்றிய முழு சிந்தனை வழிகளையும் உருவாக்க அனுமதித்துள்ளது. "வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." என்று ஏசாயா 1: 18ல் தேவன் இந்த திறனிடம்தான் கேட்டுக்கொள்கிறார். இந்த புவிசார்ந்த பூமியில் வேறு எந்த விலங்குகளிடம் பாவத்தைப் பற்றி தேவன் நியாயப்படுத்துகிறார்? மனிதனிடம் மாத்திரமே.

இந்த சுருக்க (நுண்ணிய) சிந்தனை எடுக்கும் ஒரு வடிவம்தான், மனிதனின் நடத்தையை நிர்வகிக்க ஒரு சில சட்டங்கள் அல்லது கொள்கைகளை உருவாக்குவதும் புரிந்துகொள்வதும் ஆகும். இந்த கொள்கைகளில் வெளிப்புற அபாயங்கள் மட்டுமல்லாமல் (அருகிலேயே ஒரு வேட்டையாடி கொன்று தின்னும் விலங்கு இருக்கிறதா ?), உள் உணர்ச்சிகள் மற்றும் மதிப்புகள் (அன்பு, நேர்மை, தன்னலமற்ற தன்மை) ஆகியவையும் அடங்கும். இந்த திறன்தான் முதல் பிரமாணத்தை ஆதாமிடம் முன்வைக்க தேவனுக்கு சாத்தியமாக்கியது :" தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீதோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம், அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதியாகமம் 2:16,17)

மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் மூலம், அவர்களின் நடத்தை, உணர்ச்சிகள் மற்றும் ஒருவருக்கொருவர் இடையிலான, அவர்களின் தேவன் மற்றும் அவர்களின் சூழலுக்கும் இடையிலான உறவுகளைப் பற்றிய சிந்தனைகளை நிர்வகிப்பதற்கான கொள்கைகளை இஸ்ரயேல் முன்வைப்பதற்காக தேவன் இந்த அதே திறனைத்தான் பயன்படுத்தினார். "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால், உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்." (உபாகமம் 28:1) இந்த நியாயப்பிரமாணத்திற்கு அவர்களின் கீழ்ப்படிதலின் அடிப்படையில் வெகுமதிகளையும் தண்டனைகளையும் இஸ்ரயேலுக்கு இந்த நியாயப்பிரமாணம் முன்வைத்தது. மனிதனைத் தவிர வேறு எந்த விலங்கும் புவிசார்ந்த பூமியில் அத்தகைய சட்டத்தைப் பெறுவதற்கும் புரிந்து கொள்வதற்கும் இணங்குவதற்கும் திறனைக் காட்டியதில்லை. இறுதியாக, இந்த திறன் மனிதனுக்கு ஐந்து புலன்களால் கண்டறிய முடியாத மனிதர்களையும் பொருள்களையும் அடையாளம் காணவும் தொடர்புப்படுத்தவும் திறனை அளிக்கிறது. பல விலங்குகள் மனிதனை விட மிகவும் வளர்ச்சியடைந்த புலன்களைக் கொண்டுள்ளன, ஆனால் தங்களது புலன்களால் நேரடியாக அறிய முடியாத தேவன் மற்றும் தேவதூதர்கள் போன்ற ஜீவிகளின் இருப்பைப் புரிந்துகொள்வதற்கான ஆதாரங்களை யாரும் அளிக்கவில்லை. மனிதனைப் போலல்லாமல், விலங்குகள் பொருள்கள், நிகழ்வுகள், செயல்முறைகள் அல்லது இயற்கையின் சக்திகளைக் கவனிக்க முடியாது மற்றும் கவனிக்க முடிகின்ற ஒன்றுக்கு காரணம் (எ.கா.ஒரு ஜீவி அல்லது சக்தி) ஏதோவொரு கவனிக்க முடியாத ஒன்று என்ற முடிவுக்கு வரமுடியாது. அப்போஸ்தலன் பவுல் எழுதியதற்கு மனிதனால் மட்டுமே சரியாக பதிலளிக்க முடியும்: "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில்... பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்" ? (எபிரெயர் 12:25)

### மனிதனின் மேம்பட்ட திறன்கள் - உருவாக்கும்

மனிதனின் சிருஷ்டிப்புக்கான கூடுதலான சான்றுகள் யாதெனில், அவனது சூழலை வடிவமைக்க அல்லது உருவமைக்க கருவிகள், சக்தி அல்லது பிற பொருள்களை உருவாக்கும் திறனேயாகும். சில விலங்குகள் இயற்கையாக நிகழும் பொருட்களை (எ.கா. கல்) ஒரு கொட்டையின் ஓட்டை உடைப்பதற்கான கருவியாக அல்லது உள்ளே இருப்பதை சாப்பிடுவதற்கு ஒரு சிப்பிகளைப் பயன்படுத்தக்கூடிய திறனைக் கொண்டிருந்தாலும், அவைகளின் வாழ்க்கையை எளிதாக்க அல்லது திறமையாக மாற்ற சக்கரம், சுத்தி, உலை, அச்சகம், கணினி, செல்போன் போன்ற ஒரு கருவியை அவற்றால் உருவாக்க முடியாது. இந்த திறன் கிறிஸ்துவின் பூமிக்குரிய இராஜ்யத்தில் மனிதன் தனது சக மனிதனிடம் தேவனுடைய அன்பின் குணத்தினை நிரூபிக்க அனுமதிக்கும், இதன் மூலம் நித்திய

ஜீவனுக்கான உரிமையைப் பெறுவார்கள்." வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்." (மத்தேயு25:34-36) மனிதனின் படைப்பு திறன் அவனது சக மனிதனுக்கு ஒரு உதவியாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும் திறனுக்கு முக்கியமானது.

**மனிதனின் மேம்பட்ட திறன்கள் -- தொடர்புகள்**

இறுதியாக, மொழி மற்றும் இருப்பிடத்தில் வேறுபாடுகள் இருந்தபோதிலும், தன் இனத்தோடு அந்த தகவல் தொடர்புகளைப் பதிவுசெய்து சேமித்து வைப்பதற்கும், பின்னர் அந்தத் தொடர்பை வருங்கால சந்ததியினருக்காகப் பரப்புவதற்கும் மனிதன் தொடர்பு திறனைக் கொண்டிருப்பது அவரது சிருஷ்டிப்பின் மற்றொரு சான்றாகும். இந்த தொடர்பு மனிதனுக்கு முன் வாழ்ந்த மற்றவர்களின் அனுபவங்கள் மற்றும் கண்டுபிடிப்பு களிலிருந்து கற்றுக்கொள்ளவும் பிரயோஜனமடையவும் அனுமதித்துள்ளது. இவை மனிதனுக்கு தேவனைப் பற்றி போதிக்கின்றன.

"தேவனுடைய செய்கைகளை வந்துபாருங்கள், அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்குங் கிரியையில் பயங்கரமானவர். கடலை உலர்ந்த தரையாக மாற்றினார், ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள், அங்கே அவரில் களிகூர்ந்தோம். அவர் தம்முடைய வல்லமையினால் என்றென்றைக்கும் அரசாளுகிறார், அவருடைய கண்கள் ஜாதிகள் மேல் நோக்கமாயிருக்கிறது. துரோகிகள் தங்களை உயர்த்தாதிருப்பார்களாக. (சங்கீதம் 66:5-7)

**முடிவுரை - சிருஷ்டிகருக்குக் கீழ்படிதல்**

மனிதன் ஒரு சிருஷ்டிக்கப்பட்ட ஜீவன் என்பதால், அவனை சிருஷ்டித்தவருக்கு தன்னுடைய இருப்பினால் கடமைப்பட்டிருக்கிறான். இவ்வாறாக அவனது சிருஷ்டிகர் மனிதனிடம் நீடித்த வாழ்க்கைக்குக் கீழ்ப்படிதலைக் கேட்பது நியாயமானதாகும், மேலும் வாழ்க்கையின் தொடர்ச்சியான தயவிற்காக இந்த கீழ்ப்படிதலை மனிதன் வழங்குவது பொருத்தமானதாகும்.

"கர்த்தரே தேவனென்று அறியுங்கள் நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது." (சங்கீதம் 100:3-5)

# நம்முடைய அன்றாட வாழ்வில் நோவா பேழையின் முக்கியத்துவம்



*Dr. Jesus Milton Rousseau*

"விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்."(எபிரெயர் 11:7)

வெள்ளம் அல்லது கடந்த அத்தியாயங்களில் பாரில் அழிவின் அறிகுறிகள் இல்லாதபோதும், நோவா ஒரு பெரிய பேழையைக் கட்டி, தன்னுடைய சந்தேகத்திற்கு இடமில்லாத தன்மை, உறுதி, தேவன் மீது வலுவான நம்பிக்கை , விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலை அவர் வெளிப்படுத்தியபடியாக அவர் நினைவுக்கூறப்படுகிறார். எல்லா மனிதர்களையும் உயிரினங்களையும் அழிக்கக்கூடிய எந்த ஒரு வெள்ளத்தைப் பற்றிய அனுபவமும் இல்லாதபோதும் நோவா தேவனை நம்பினார். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே "நீதிமானும்" "உத்தமனுமாயிருந்தான்," நோவா "தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தார்". (ஆதியாகமம் 6:9) ஆகையால், பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களையும் காப்பாற்ற தேவன் அவரை தெரிந்தெடுதார்.

தேவன் மீது நோவா கொண்டிருந்த மாற்ற இயலாத நம்பிக்கை, அவரை பரிசுத்த வேதாகமத்தில் சிறந்த விசுவாச வீரர்களில் ஒருவராக ஆக்கியது. (எபிரெயர் 11:7) "நீதியைப் பிரசங்கித்தவராகிய நோவா" என்று பேதுரு அவரைப் பற்றி குறிப்பிடுகிறார். (2பேதுரு2:5) அதிபர்கள், அதிகாரங்கள் மற்றும் இருளின் ஆட்சியாளர்களுக்கு எதிராக நாம் போராடுவதற்கு, நோவா நமக்கு ஒரு எடுத்துக்காட்டாவார். (எபேசியர் 6:12) நம்முடைய கர்த்தருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்படுவதை எதிர்பார்த்திருக்கும் நமக்கு, நோவாவின் பேழையைப் பற்றி நாம் அனைவரும் படிக்கவேண்டும். (ஆதியாகமம் 6:8-9:17) இப்போது, நோவாவின் பேழை நம் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பார்ப்போம்.

## தொல்பொருள் சான்றுகள்

முதலில், நோவாவின் பேழை உண்மையில் இருந்ததா ? வரலாற்றாசிரியர்கள், புராணக்கதைகள் மற்றும் பல நூற்றாண்டுகளாக பல்வேறு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அராரத் தலைக்குச் சென்று நோவாவின் பேழையைப் பற்றி பல்வேறு நேர்மையான தகவல்களை அளித்துள்ளனர்.

1955 ஆம் ஆண்டில், பிரெஞ்சு ஆய்வாளர் பெர்னாண்ட் நவர்ரா, அராரத் மலைக்கு தனது மூன்றாவது வருகையின் போது, நோவாவின் பேழையைக் கண்டுபிடித்து, 1.5 மீட்டர் மரத் துண்டை ஒரு ஆழமான பனிப்பாறைப் பிளவிலிருந்து கொண்டு வந்தார். அந்த மரத்தின் துண்டுகள் கடுமையான சோதனைக்காக அனுப்பட்டது. இந்த மரம் 4,800 வருடங்களுக்கு மேலானது என்பதை, அதாவது நோவாவின் காலத்திற்கும் முந்தையது என்று உறுதிப்படுத்தியது.1979 ஆம் ஆண்டில், ரான் வியாட் மற்றும் பிற ஆராய்ச்சியாளர்கள் துருக்கியின் அராரத் மலைக்குச் சென்றனர். நோவாவின் பேழையின் எச்சங்கள்,"படகு வடிவம் கொண்ட பொருள்" என்பதை நிருபிக்க அவர்கள் மூலக்கூறு அதிர்வெண் ஜெனரேட்டர்கள்( molecular frequency generators), உலோகக் கண்டுபிடிப்பாளர்கள் (metal detectors)மற்றும் துணை மேற்பரப்புsub-surface மற்றும் ரேடார் கருவிகளைப் radar equipment பயன்படுத்தினர். 10 வருட ஆராய்ச்சி மற்றும் கணிசமான ஆதாரங்களுக்குப் பிறகு, 1987 ஆம் ஆண்டில், இந்த தளம் நோவாவின் பேழை தேசிய பூங்கா என்று துருக்கிய அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. சமீபத்தில், 2010 ஆம் ஆண்டில், நேஷனல் ஜியோகிரா.:.பிக் நியூஸ் மற்றும் .:.பாக்ஸ் நியூஸின் படி, நோவாவின் பேழை அமைச்சகங்கள் சர்வதேசத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ ஆய்வாளர்கள் குழு துருக்கியில் உள்ள அராரத் மலையில் நோவாவின் பேழையைக் கண்டுபிடித்ததாகக் கூறியது. சமீபத்தில், 2010 ஆம் ஆண்டில், நேஷனல் ஜியோகிரா.:.பிக் நியூஸ்National Geographic News மற்றும் .:.பாக்ஸ் நியூஸின் படி Fox News, துருக்கியில் உள்ள அராரத் மலையில் நோவாவின் பேழை கண்டுபிடிக்கப்பட்டதாக, சர்வதேசத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ ஆய்வாளர்கள் குழுக் கூறியது. (பதிப்பாசிரியரின்

குறிப்பில்- இந்த மூன்று பரஸ்பரமாக பிரத்யேகமானது, ஒரே ஒரு நோவாவின் பேழை மட்டுமே இருக்க முடியும். 2010 உரிமை கோரல் அரங்கேற்றப்பட்டதாகத் தோன்றுகிறது (youtube.com/ watch? v=ohErNwECcvw) எனவே மற்ற இரண்டு சாத்தியக்கூறுகளிலிருந்து விலகிவிடாது.

நோவாவின் பேழையின் எச்சங்கள் வரலாற்று ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும், தொல்பொருள் ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் காணப்பட்டாலும், நோவாவின் பேழையின் ஆதாரத்தை சவால் செய்யும் பல்வேறு கோட்பாடுகள் இன்னும் உள்ளது. இருப்பினும், கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம், வேதாகமத்தில் எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தைகள் சத்தியம் என்று உண்மையிலேயே நம்புகிறோம், "வானமும், பூமியும் ஒழிந்துபோகும், ... "(மத்தேயு 24:35. லூக்கா 21:33, சங்கீதம் 12:6, 89:34, 2பேதுரு 1:20, 21, 2தீமோத்தேயு 3:16, நீதிமொழிகள் 30:5)

### ஜலப்பிரளயத்திற்கான காரணம்

நோவாவின் காலத்தில், தேவனால் வழங்கப்பட்ட ஒரு சிறப்பு வல்லமையை அதாவது பொருள்மயமாக்கலின் வல்லமையை தேவ தூதர்கள் பெற்றிருந்தார்கள், இதன் மூலம் அவர்கள் தங்களை மனிதர்களாக மாற்றிக்கொள்ள முடிந்தது. (ஆதியாகமம் 18 காண்க) இந்த தேவதூதர்கள் தங்களை ஆண்களாக உருமாற்றி கொண்டு, மனுஷ குமாரத்திகளை திருமணம் முடித்தார்கள். இதனால் இவர்கள் இராட்சதர்களைப் பெற்றெடுத்தார்கள். (இதற்கு நெபிலிம் என்ற எபிரெய வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளது, இதற்கு "விழுந்து போனவர்கள்" என்று பொருள்) இவர்களின் சந்ததியினர் மனித இனத்தின் ஒரு பகுதியாக கருதப்படவில்லை. (ஆதியாகமம் 6:1-4காண்க) இந்த இராட்சதர்கள் இயல்பான மனிதர்களை விட உடல்ரீதியாகவும் அறிவுப்பூர்வமாகவும் மேன்மையானவர்களாக இருந்தார்கள். இவர்கள் பூமியை துன்மார்க்கத்தினாலும் வன்முறையினால் நிரப்பினார்கள். "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது." (ஆதியாகமம் 6:5) தேவன் மனிதனை சிருஷ்டித்ததற்காக வருத்தப்படும் அளவுக்கு அக்கிரமம் பெருகியது. (ஆதியாகமம் 6:6 அல்லது மனிதனை நோக்கிய வழியை அவர் மாற்றினார்.) ஆகையால், தேவன் இந்த இராட்சதர்களோடு பாவமுள்ள மனுக்குலத்தையும் அழிக்க திட்டமிட்டார். அதாவது கலப்பு வம்சாவளியைச் சேர்ந்த நெபிலிமின் முறையற்ற இனத்தை அழிக்க தீர்மானித்தார். (ஆதியாகமம் 6:7)

இந்த இராட்சதர்கள் ஆதாமின் சந்ததியாராக இராததினால், தேவன் இவர்களை அங்கீகரிக்கவில்லை. நம்முடைய ஆண்டவர் ஆதாமின் சந்ததிக்காக மட்டுமே மரித்ததினால், இந்த இராட்சதர்கள் உயிர்த்தெழ மாட்டார்கள்." (1கொரிந்தியா15:21,22, ரோமர் 5:12-19) ஜலப்பிரளயத்திற்கு பிறகு, பாவம் செய்த தேவதூதர்களின் உடல்கள் களையப்பட்டு, "அந்தகார சங்கிலிகளினால் கட்டப்பட்டு" தீர்ப்புக்காக வைக்கப்பட்டார்கள். (2பேதுரு2:4, யூதா6)

### அறிவுறுத்தல்பேழையின் பரிமாணங்கள்

வேதாகமத்தின் படி, பேழை 300 முழ நீளமும், 50 முழ அகலமும், 30 முழ உயரமுமாக இருந்தது. (ஆதியாகமம் 6:15) முழம் என்பது முழங்கையில் இருந்து நீளமான விரல் வரை கையின் நீளத்தை அடிப்படையாகக் கொண்ட, ஒரு பழைய அளவீட்டு முறையாகும். ஒரு முழத்தின் நீளம் 17.6 அங்குலங்கள் முதல் 21.88 அங்குலங்கள் வரை உள்ளதாக பல்வேறு பரிந்துரைகள் உள்ளது. இதில் நீண்ட நீளத்தை நாம் எடுத்துகொண்டால், நோவாவின் பேழை 547 அடி நீளமும், 91.2 அடி அகலமும், 54.7 அடி உயரமும் இருந்திருக்கும். பேழைக்கு ஒரு ஜன்னல், கதவு மற்றும் மூன்று தளங்கள் இருந்தன (ஆதியாகமம் 6:16) பாதுகாப்பைப் பொறுத்தவரை, நோவாவின் பேழையின் பரிமாணங்கள் ஒரு ஸ்திரமான அல்லது நிலையான கப்பலுக்காக உருவாக்கப்பட்டது என்று நவீன பொறியியலாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

பேழை கோபேர் மரத்தினால் கட்டப்பட்டது, இது சில ஆராய்ச்சியாளர்களின் கூற்றுபடி சைப்ரஸ் மரமாகும். மரத்திற்குள் நீர் கசிவதை தடுப்பதற்கு "கீழ்", ஒரு தார் போன்ற பொருள் பயன்படுத்தப்பட்டது. (ஆதியாகமம் 6:14) இந்த பேழை தண்ணீரில் பயணிப்பதற்காக அல்ல சீராக மிதப்பதற்கே கட்டப்பட்டிருந்ததினால், இன்று கட்டப்படும் நவீன கப்பல்களின் வடிவத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. இதனால் அடிதளம் தட்டையாக இருந்திருக்கலாம்.

மேலும், பேழையில் உள்ள அனைத்து விலைமதிப்புள்ள உயிர்களை பாதுகாக்கும் பணியை நிறைவேற்றும்படியாக, பேழை பிரளயத்திற்கு எதிராக தெய்வீக பாதுகாப்போடு மிதந்தது. சுமார் 5,500 வகையான

நில பாலூட்டிகளுடன், ஒவ்வொன்றிற்கும் சராசரியாக 27 சதுரடி இருந்திருக்கும். (ஒரு மதிப்பீட்டின்படி,12 சதவிகிதம் ஆடுகளை விட பெரியதும், செம்மறி ஆட்டுக்கும் எலிக்கும் இடையில் 31 சதவீதமும் மற்றும் 57 சதவீதம் எலியை விட சிறய ஜந்துக்கள் இருந்தது.) சராசரியாக ஒரு வீட்டு பூனையின் அளவை அந்த பிராணிகள் கொண்டிருந்தால், பல கூண்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தாலும், அனைவருக்கும் போதுமான இடம் இருந்திருக்கும். ஐந்து மில்லியன் வகையான பூச்சிகளையோ அல்லது ஜலத்தில் வாழும் 40,000 வகையான மீன்களையோ பற்றி கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

### பேழையில் தங்கியிருந்த காலம்

"நோவாவுக்கு அறுநூறாம் வயதாகும் வருஷம் இரண்டாம் மாதம் பதினேழாம் தேதியாகிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக்கண்களெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுகளும் திறவுண்டன." (ஆதியாகமம் 7:11) அதிர்ச்சிகரமான வெள்ளம் தொடங்கியது. நோவாவின் வாழ்க்கையின் 601 வது வருடம், 2 வது மாதம், 27ம் தேதி அன்று, பூமி இறுதியாக வறண்டிருந்தது. (ஆதியாகமம் 8:13,14) ஆதியாகமம் 7:7- 10ன் படி, மழை பெய்யும் வரை நோவா 7 நாட்கள் பேழையில் இருந்தார். எனவே, நோவா 7 நாட்கள் மற்றும் ஒரு வருடம் 10 நாட்கள் அல்லது 377 நாட்கள் (வருடத்திற்கு 360 நாள் கணக்கின்படி) பேழையில் தங்கியிருந்தார்.

### யார் காப்பாற்றப்பட்டனர் ?

நோவா, அவரது மனைவி, அவரது மூன்று குமாரர்கள் மற்றும் மூன்று மருமகள்கள், அதாவது எட்டு மனிதர்களை மட்டுமே அந்த பேழை சுமந்தது. (ஆதியாகமம் 1,7,13, 1பேதுரு3:20) ஏழு ஜோடி சுத்தமான விலங்குகளும், இரண்டு ஜோடி அசுத்தமான விலங்குகளும் (ஆதியாகமம் 7:2) மற்றும் அனைத்து பறவைகளிலும் ஏழு ஜோடிகள் இருந்தன. (ஆதியாகமம் 7:3) சுத்தமான விலங்குகள் மனித உணவுக்கு ஏற்றதாக இருந்தது. எடுத்துக்காட்டு, செம்மறி ஆடுகள், அசுத்தமான விலங்குகள் உணவுக்கு பொருத்தமற்றவையாக இருந்தாலும், மற்ற வேலைகளுக்கு பயனுள்ளதாக இருந்தது. எடுத்துக்காட்டு -குதிரைகள்.

### வானவில் உடன்படிக்கை

பேழையை விட்டு இறங்கிய பிறகு, நோவா தேவனுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்."அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்." (ஆதியாகமம் 8:20) தேவன் அவரது பலியை ஏற்றுக்கொண்டு, "சுகந்த வாசனையைக் கர்த்தர் முகர்ந்தார். அப்பொழுது கர்த்தர்: இனி நான் மனுஷன் நிமித்தம் பூமியைச் சபிப்பதில்லை; மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது. நான் இப்பொழுது செய்ததுபோல, இனி சகல ஜீவன்களையும் சங்கரிப்பதில்லை." (ஆதியாகமம் 8:21)என்று அவர் இருதயத்தில் சொல்லிக்கொண்டார். ஆதியாகமம் 9:9-17ல், இனி பூமியை மீண்டும் ஜலத்தினால் அழிப்பதில்லை என்பதற்காக, தேவன் அவருடைய "வானவில் உடன்படிக்கையை" ஒவ்வொரு உயிரினங்களுடனும் ஏற்படுத்தினார்."நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" (ஆதியாகமம் 9:13)

### படிப்பினைகள்

தேவபக்தியற்ற ஜனங்களை அழிப்பதற்காக இந்த ஜலப்பிரளயம் வந்தது. உன்னதமான எட்டு ஆத்துமாக்கள் மட்டுமே தண்ணீரிலிருந்து மீட்கப்பட்டனர். இது ஞானஸ்நானத்திற்கு அடையாளமாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மை மீட்கும் ஞானஸ்நானத்தோடு, நோவாவின் குடும்பத்தை தொடர்புப்படுத்துகிறார். "அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் காக்கப்பட்டார்கள். அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த் தெழுதலினால் இரட்சிக்கிறது;" (1பேதுரு 3:20,21)

இஸ்ரயேல் செங்கடலைக் கடந்ததை, ஞானஸ்நானத்திற்கான அடையாளமாக, அங்கும் ஜலம் பயன்படுத்தப்பட்டது. (1கொரிந்தியர் 10:1,2) இதே போல், கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் மட்டுமே நாமும் நம்முடைய ஆண்டவரின் பாதுகாப்பான

பேழைக்குள் பிரவேசித்து, இரட்சிக்கப்பட முடியும். "" (மாற்கு16:16) ஜலத்தில் மூழ்கி எழும்பும் வெறும் செயலைக் காட்டிலும் ஞானஸ்நானம் அதிக முக்கியத்துவம் கொண்டது. விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்பின் அடையாளமான ஞானஸ்தானத்தின் மூலம், நாம் கிஸ்துவின் மரணத்தில் மூழ்குவதால், நாம் பாதுகாப்பு பேழைக்குள் பிரவேசிக்கிறோம். (ரோமர் 6:4) ஞானஸ்நானத்திற்குப் பிறகு, தேவனுடைய பரிசுத்த ஆவியின் மூலம் (அப் 2:38, அப் 22:16, கொலோசெயர் 2:12, எபேசியர் 4:4- 6,ரோமர் 6:3-8, யோவான் 3:5, மத்தேயு28:19, 1கொரிந்தியர் 12:13, 2கொரிந்தியர் 5:17) புது சிருஷ்டிகளாக நாம் ஜெநிப்பிக்கப்பட்டதினால் நாம் "கிறிஸ்துவை தரித்துக்கொண்டோம்". (கலாத்தியர் 3:27)

மரத்தினால் செய்யப்பட்ட பேழை, நோவாவின் குடும்பத்தை தேவனுடைய கோபத்திலிருந்து (வெள்ளம்) காப்பாற்றியது. இதேபோல, கிறிஸ்துவின் ஈடுபலியை அடையாளப்படுத்தும், மரத்தினால் செய்யப்பட்ட சிலுவை, நம்முடைய பாவங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது. (யோவான் 3:36)

நோவாவின் குடும்பம் பேழைக்குள் நுழைந்ததால் உயிர் தப்பியது. அதேபோல், நாம் தப்பித்துக்கொள்வதற்கு, இயேசுவாகிய வாசலுக்குள் பிரவேசிக்கவேண்டும். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்."(யோவான் 10:9, 14:6) பேழைக்குள் இருந்தவர்களுக்கு அந்த பேழையே அடைக்கலமாக இருந்தது. அதுபோன்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு, தேவனுடைய கோபத்திலிருந்து நம்மை இரட்சிக்க, அவரே அடைக்கலமாக இருக்கிறார். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.நாம் தேவனுக்குச் சத்துருக்களா யிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்ட பின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே." (ரோமர் 5:9,10) இயேசுவை நமக்கு இரட்சகராக கொடுத்ததன் மூலம், "தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர்." (சங்கீதம் 46:1,91:2, 34:8, 9:9, 16:1, ஏசாயா25:4, எரேமியா16:19, நாகூம், 1:7)

இறுதியாக, நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் பிரசன்னம், நோவாவின் காலத்துடன் ஒப்பிடப்படுகிறது. "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும். எப்படியெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான காலத்திலே நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள்வரைக்கும், ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும்,ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்." (மத்தேயு 24:37-39, லூக்கா 17:26,27) அதேபோல், நோவாவின் காலத்தில் இருந்ததைப் போலவே தற்போதைய உலகமும் துன்மார்க்கம், தேவபக்தியற்ற மற்றும் அநீதியான வழிகளால் நிறைந்திருக்கிறது. மனுக்குலத்திற்கு எதிராக, தீவிரவாத குழுக்களினால் (ஐ.எஸ்.ஐ.எஸ் போன்றவை) ஏற்படும் வன்முறைகள், அதிகரித்திருக்கும் ஆபாச படங்கள், கொடுமைகள், ஸ்திரீகள் மற்றும் சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்தல், ஓரின சேர்க்கை திருமணங்கள், பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை தயாரிப்பு போன்றவைகளை (அணு ஏவுகணைகள், உயிரியல் முகவர்கள் போன்றவை -மத்தேயு24:7,21)நாம் இன்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நோவாவின் காலத்திலுள்ள, "புகழ்பெற்ற மனிதர்களாக" இருந்த இராட்சதர்களைப் போலவே, இன்றைய உலகிலும் "பெருநிறுவன இராட்சதர்கள்" உள்ளனர். ஆகவே, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தின் எல்லா அறிகுறிகளையும் தற்போதைய உலகம் காட்டுகிறது. ஏனெனில், எல்லா தீமைகளும் நிகழும் போது நோவா இருந்ததை போல, இப்போது நம்முடைய கர்த்தரும் இருக்கிறார். ஆகவே, நம்முடைய "மணவாளனாகிய" இயேசுவை ஏற்றுக்கொள்ள, நாம் "புத்தியுள்ள கன்னிகைகளாக" ஆயத்தத்தோடு காத்திருக்கவேண்டும். (மத்தேயு25:1-13, 9:15)

**நம்முடைய அன்றாட வாழ்வில் முக்கியத்துவம்**

இந்த அனுபவத்தால் நோவாவின் விசுவாசம் கடுமையாக சோதிக்கப்பட்டது. ஆனால் நோவாவுக்கோ, நம்முடைய தேவனாகிய யேகோவாவின் மேல் உண்மையான நம்பிக்கையும், சந்தேகத்திற்கு இடமின்றி விசுவாசத்தையும் கொண்டிருந்தார். மேலும் அவருடைய எல்லா கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தார். (ஆதியாகமம் 6:22) "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே

காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்." என்று எபிரெயர் 11:7 கூறுகிறது. இதேபோல், நம்முடைய தேவனாகிய யெகோவாவின் மீது நாம் நம்பிக்கைக் கொண்டு, சந்தேகத்திற்கு இடமில்லாத விசுவாசத்தை கொண்டிருக்கவேண்டும். "அகங்காரிகளையும் பொய்யைச் சார்ந்திருக்கிறவர்களையும் நோக்காமல், கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்." (சங்கீதம் 40:4) விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் வருகிறது. (ரோமர் 10:17) "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்." (1கொரிந்தியர் 16:13) என்று பவுல் நம்மை எச்சரிக்கிறார். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." (ரோமர் 1:17) என்றும் அவர் நமக்கு கூறுகிறார். இயேசு கிறிஸ்துவின் வழியாக நம் தேவனை உண்மையாக பின்பற்றுபவர்களாகிய நாம் "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டும்". (2கொரிந்தியர் 5:7, எபிரெயர் 11, 1பேதுரு1:7, 1யோவான் 5:4, சங்கீதம் 118:8, 1கொரிந்தியர் 2:5, எபேசியர் 6:16) தேவன் நம்மை சோதிப்பார் என்பதை நாம் மனதில் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவேண்டும். நிச்சயமாக, அதைத் தாங்கிக்கொள்ளும் பெலனனை அவர் கொடுப்பார்.(1கொரிந்தியர் 10:13)

பேழையை நிர்மாணிக்கத் தேவையான வலிமை, திறன்கள், அறிவுறுத்தல்கள் மற்றம் அறிவுசார் திறன் ஆகியவற்றை தேவன் நோவாவுக்குக் கொடுத்தார். ஆகையால், நோவா பயன்படுத்த வேண்டிய பரிமாணங்களையும் பொருட்களையும் மட்டுமே தேவன் கொடுத்திருந்தாலும், அவர் மகத்தான பணியை வெற்றிகரமாக முடிக்க முடிந்தது. அதேபோல், தேவன் தம்முடைய பிள்ளைகளின் இரட்சிப்பைப் பெறுவதற்குத் தேவையான அனைத்தையும் செய்ய அவர் பெலன் கொடுப்பார். "சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்." (ஏசாயா 40:29) "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்." (சங்கீதம் 28:7) என்று தாவீது கூறினார். (2 கொரிந்தியர் 12:9-10 வசனங்களையும் காண்க) தேவன் தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் மாம்சத்தின்படி, வலிமையானவர்களோ, வலிமையற்றவர்களோ, அல்லது ஞானமுள்ளவர்களோ, ஞானமற்றவர்களோ என்பதைப் பொருட்படுத்தாமல் வழிநடத்துவார். (1கொரிந்தியர் 1:26,27)

நோவாவின் காலத்தில், இந்த முழு உலகம் தங்களுடைய அழிவு உடனடியாக நேரிடபோகிறது என்பதை அறியாமல், மனமகிழ்ச்சியோடும், ஆரவாரத்தோடு கொண்டாடிக்கொண்டிருந்தனர். தேவனுடைய அறிவுறுத்தலின்படி நோவாவும் அவருடைய குடும்பத்தினர் மட்டுமே தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒரு பேழையை பொறுமையாகக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதேபோல், தற்போதைய காலத்திலும், உலகில் பெரும்பான்மையான ஜனங்கள் தங்கள் வாழ்க்கை முறைகள், சுயநலம், தீய எண்ணங்கள் மற்றும் துரோக செயல்களில் மகிழ்ச்சியடைகையில், "தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களாகிய" நாம் விழிப்புடன் இருந்து, நம்முடைய ஜீவனுள்ள தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். இயேசு எச்சரித்ததைப் போல, நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். (லூக்கா21:36) (மத்தேயு26:41வும் காண்க)

மழையின் அறிகுறிகள் எதுவும் இல்லை என்றாலும், பேழையை பொறுமையாகக் கட்டியதன் மூலம் நோவா தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தார். அவருடைய அயலகத்தார்கள், நோவாவையும் அவரது குடும்பத்தினரையும் கேலி செய்திருந்தாலும், அவர் விடாமுயற்சியுடனும், முனைப்புடனும் பேழையை கட்டி முடித்தார். இதேபோல், பவுல் எபேசியரில் எழுதியது போல, கேலிக்கைகள், சோதனைகள், பரீட்சைகள் மற்றும் உபத்திரவங்களுக்கு எதிராக நாம் ஒவ்வொரு நாளும் போராடவேண்டும். "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்." மேலும், நாம் "உபத்திரவங்களில் பொறுமையயோடு, தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருக்கவேண்டும்" (ரோமா12:12,8:35, அப்போஸ்தலர் 14:22, கொலோசேயர் 3:12,1தீமோத்தேயு 6:11,யாக்கோபு5:8)

"கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்."(சங்கீதம் 40:1) என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஜீவ கிரீடத்தைப் பெறுவதற்குத் தேவையான கிறிஸ்தவ குணத்தை நமக்குள் வளர்ச்சி அடைய, தேவனுடைய சித்தத்தின் படி நமக்கு தேவையான பயிற்சியளிப்பதற்கே தற்போதைய சோதனைகள் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் எப்போதும் ஒப்புக்கொள்ள வேண்டும். (யாக்கோபு1:12, 1கொரிந்தியா10:13, 1பேதுரு4:12,13) மீண்டுமாக ரோமர் 8: 18ன் வார்த்தைகளால் பவுல் நம்மை பலப்படுத்துகிறார். "ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.".

இறுதியாக, நோவாவின் செயல்கள்," விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்துத் தேவஎச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்." (எபிரெயர் 11:7) நாமும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி, நம்முடைய சிலுவையை எடுத்துக்கொள்வதன் மூலம் நீதியை மதிப்பிடவேண்டும். (மத்தேயு16:24-26,கலாத்தியர் 5:24)ஆவிக்குரிய இரட்சிப்புக்காகவும், ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காகவும், இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்களை தேவன் "தெரிந்துக்கொண்டது " போலவே, நோவாவும் இந்த உன்னத பணிக்காக தெரிந்தெடுக்கப்பட்டார். (யோவான் 15:16,1பேதுரு2:9, ரோமர் 8:28,2தெசலோனிக்கேயர் 2:13)நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துவோம். தேவன் அனுமதிக்கக்கூடிய உலக ஜனங்களினால் வரும் சோதனைகள், இன்னல்கள் மற்றும் கேலிக்கூத்துகள் அனைத்தையும் சகித்துக்கொள்வோம். நாம் நீதியுள்ளவர்களாக இருந்து, நம்முடைய ஒன்றான அன்புள்ள உண்மையான தேவனிடத்திலும், அவருடைய ஒரே பேறான குமாரனும், நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலும், ஒருபோதும் முடிவில்லாத விசுவாசத்தில், உறுதியோடிருப்போம்!

### அதைப் பிடிக்க நமக்கு 35 நூற்றாண்டுகள் பிடித்தன

# மோசே மற்றும் நியாயப்பிரமாணம்



James Parkinson

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்." (சங்கீதம் *111:10*)

மோசேயின் பிறப்பு மற்றும் எகிப்தின் அரச குடும்பத்தில் அவரது வளர்ப்பும் யாத்திராகமம் 2:1-10ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜேன்ஸ் மற்றும் ஜாம்பரெஸால் மோசே எதிர்க்கப்பட்டதாக, கமாலியேலிடம் படித்த பவுல் கூறுகிறார். {39 வருடங்கள் ஆட்சி புரிந்த எகிப்திய சீசரென்ரே கியான், மற்றும் 3 வருடங்கள் ஆட்சி செய்த மேப்ரே ஷேஷி மற்றும் எகிப்தின் (ஹைக்சோஸ்)15வது வம்சத்தின் இரண்டு பார்வோன்களாகிய கிரேக்க ஜனாஸ் மற்றும் (ஜம்ப்ரெஸ்)அசிஸ்} இந்த எழுத்துக்கள் மோசேயால் கண்டுபிடிக்கப்பட்டதாக யூத எழுத்துக்கள் கூறுகின்றன. பெரிய பார்வோன் அம்மெனெம்ஸ் IIIஇன் 18 ஆவது ஆண்டின் முற்பகுதியின் ஆதாரங்களின் அடிப்படையில், இது முன்பே இருந்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறார்கள். (ஒருவேளை, யோசேப்பின் காலத்தில் வாழ்ந்த பார்வோன், தனது 4 முதல் 18 ஆம் ஆண்டு வரை பாசால்ட் குவாரிகளை basalt quarries மூடியவர்) (www.asor.org/anetoday/2017/04/ hebrew-first-alphabet)

பார்வோன் யாக்கோபையும், அவருடைய குடும்பத்தினரையும் எகிப்துக்கு வந்து, தலைநகருக்கு அருகில் உள்ள மிக சிறந்த நிலத்தை எடுத்துக்கொள்ளும்படி அழைத்தார். (ஆதியாகமம் 45: 10-18) தலைநகரான அவாரிஸ், வடக்கு டெல்டாவில் உள்ள டானிஸில் இருப்பதாகவும், நிலத்தின் மிகச்சிறந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் இருப்பதாகவும் முன்னர் கருதப்பட்டாலும், இப்போது அது நைல் நதியின் புபாஸ்டைட் கிளையின் கிழக்கே,டெல் எல் - தபாவில் (=ஹாட்வேர்ட் = அவாரிஸ்), சிறந்த மண் இருப்பதாக கருதப்படுகிறது. அங்கிருந்துதான் மோசே இஸ்ரயேல் புத்திரரை எகிப்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றார். யாத்திராகமம் 12:37, 13:20 ன் படி கோசேனிலிருந்து, வனாந்திரத்தின் விளிம்பிற்கு செல்ல இரண்டு நாட்கள் பயணித்திருக்கவேண்டும்.

ஜெபல் மூசா (தென்- மத்திய சினாய்), ஹார் கார்கோம்(தெற்கு நேகேவ்), ஜெபல் அல்-லாஸ்(வடமேற்கு சவுதி அரேபியா) மற்றும் 11 பிற தளங்கள் சீனாய் மலை என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. ஜெபல் மூசா எரிமலை அல்ல என்றும் (ஆனால் தெற்கு மற்றும் மேற்கில் எரிமலை உள்ளதாக கூறப்படுகிறது), மற்றும் பண்டைய கலைப்பொருட்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை என்றும் சிலர் எதிர்க்கின்றனர். (இருப்பினும் உபாகமம் 29: 5 ன் படி எந்தவொரு பொருட்களும் விடப்படவில்லை என்று பரிந்துரைக்கலாம்) கிமு 2000 மற்றும் அதற்கு முந்தைய காலப்பகுதிகள் மட்டுமே காணப்படுகிறது என்பதை தவிர, ஹார் கார்கோம் நம்பத்தகுந்தவர். ஜெபல் அல் -லாசுக்கு அகாபா வளைகுடா வழியாக செங்கடலை கடக்கவேண்டும். 3 நாட்கள் பயணத்தில் அந்த இடத்தை அடைவது மிகவும் தொலைவில் உள்ளது, மேலும் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இப்பகுதி செழிக்கவில்லை. இப்போதைக்கு, இது நிச்சயமற்றதாக இருக்க நாம் அனுமதிக்கலாம்.

#### பிரமாணங்களின் முந்தைய குறியீடு

அநேகமாக, கிமு 23 ஆம் நூற்றாண்டில், முன்பு பதவி வகித்தவரின் பேராசை மற்றும் ஊழலுக்கு விடையளிக்கும் வகையில், லகாஷின் மன்னரால் (நவீன ஈராக்கில்) இதுவரை அறியப்படாத ஆரம்பகால சட்ட நெறிமுறைகள் (குறியீடுகள்) வழங்கப்பட்டது. "சக்தி வாய்ந்த ஒருவர் அவர்களுக்கு (கைவிடப்பட்டவர்கள் மற்றும் விதவைகள்) எதிராக அநீதி இழைக்கக்கூடாது என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. (உருக்காகினா எவ்வளவு வெற்றிகரமாக செயல்பட்டார் என்பது மற்றொரு கேள்வி, எட்டு வருட ஆட்சியின் பின்னர் அவர் கைப்பற்றப்பட்டார், லகாஷ் அழிக்கப்பட்டார்.) சும்மர் மற்றும் அக்காட் மன்னர் உர்- நம்மு (ஏறக்குறைய 2054-2036), நன்கு அறியப்பட்ட சட்ட விதிகளை வெளியிட்டார், இதனால் "அனாதைகள் செல்வந்தவர்களுக்கு இரையாக்கப்படவில்லை", "விதவைகளும் சக்திவாய்ந்தவர்களுக்கு இரையாகவில்லை, மற்றும் "ஒரு சேக்கலின் மனிதன் ஒரு மினா (அறுபது சேக்கல்) மனிதனுக்கு இரையாகவில்லை. (சாமுயேல் நோவா கிராமர், தி சுமேரியர்கள், அவர்களின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் குணாதிசயம் , யு சிகாக்கோ பிரஸ், 1960, பக்கங்கள் 79-85, 130. உர் - நம்மு, தனது

ஐந்தாம் ஆண்டில், அவர் மேற்கை வென்றதாக பெருமை பேசுகிறார் (ஆதாரபூர்வமாக அவரது நான்காம் ஆண்டில்) ஆனால் அவரது பதினெட்டாம் ஆண்டில் அவர் போரில் கொல்லப்பட்டார், "நொறுக்கப்பட்ட கப்பல் போல போர்க்களத்தில் கைவிடப்பட்டிருந்தார்" இந்த பதிவு ஆதியாகமம் 14க்கு இணையாக உள்ளது, அங்கு சிநேயாரின் இராஜாவாகிய அம்ராப்பேலும் மற்றும் கூட்டாளிகளும் மேற்கு நாடுகளை வென்ற பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, ஆபிரகாம் அவரை ஒரு ஆச்சரியமான இரவு தாக்குதலில் கொன்றிருக்கிறார்.) "ஒரு மனிதன் கெஷ்பு -கருவியால் *geshpu*-instrument, மற்றொரு மனிதனின் மூக்கை துண்டித்தால், அவன் வெள்ளி மினாவில் 2/3 செலுத்த வேண்டும்" என்பதே அவருடைய குறிப்பிடத்தக்க சட்டங்களாக இருந்தது.

ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, எஷ்னுன்னா Esh-nunna நகரத்தின் ஒரு குறியீடு (நவீன பாக்தாத்திலிருந்து கிழக்கே சுமார் பத்து மைல் தொலைவில், அக்காட்டில்), கூறுவது என்னவெனில் - "ஒரு எருது வழக்கமாகவே கொம்பினால் முட்டக்கூடியதாக இருந்தால், மேலும் அதிகாரிகள் அதன் உரிமையாளருக்கு இந்த உண்மைத் தெரியப்படுத்தியிருந்தாலும், அந்த எருதின் கொம்புகளை அவன் மழுங்கலாக்கிவிடாமல், ஒரு மனிதனை தன் கொம்பினால் குத்தி அவர் மரித்துபோனால், எருதுவின் உரிமையாளர் வெள்ளி மினாவின் மூன்றில் இரண்டு பங்கை செலுத்தவேண்டும். அரை நூற்றாண்டுக்குப் பிறகு, லிப்பிட் இஷ்டார் Lipit Ishtar ஒரு சட்ட விதிகளை வெளியிட்டார். அது சும்மர் மற்றும் அக்காட்டின் மகன்களையும் மகள்களையும் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது. பாபிலோனின் ஹம்முராபியி மன்னரின் (சுமார் 1728-1686) இன்னும் சிறப்பாக அறியப்பட்ட விதி முறைகள் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு வந்தது. "தாக்குதல் மற்றும் மின்கலம் உள்ளடக்கிய சட்டங்கள் பெரும்பாலும் சமமான பதிலடி கொள்கையின் அடிப்படையில் அமைந்தன, ஆனால் சமுதாயத்தை பிரபுக்கள், பொது ஜனங்கள் மற்றும் அடிமைகள் என மூன்று வகுப்புகளாகப் பிரித்ததன் காரணமாக சில சிக்கல்கள் இருந்ததாக ஃபினேகன் குறிப்பிடுகிறார். உதாரணமாக, "ஒரு மூத்தவர் தம்மை போல ஒரு உயர் அதிகாரத்தில் உள்ள ஒரு மூத்தவரின் பல்லை உடைத்தால், அவர்கள் அவருடைய பல்லைத் உடைப்பார்கள். அவர் ஒரு பொது ஜனங்களில் ஒருவருடைய பல்லைத் உடைத்தால், அவர் மூன்றில் ஒரு பங்கு வெள்ளி மினா கொடுக்கவேண்டும். சில சூழ்நிலைகளில் ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் மகளின் மரணத்திற்கு காரணமாக இருந்தால், அவனுடைய சொந்த மகள் கொல்லப்படவேண்டும், என்று மிக தீவிரமான சட்டம் (*lex taliones)* பயன்பாடு இதற்கு வழங்கப்பட்டது.

### தேவன் மோசேக்குக் கொடுத்த பிரமாணம்

யெகோவா தேவன் மோசேக்குக் கொடுத்த பிரமாணம் சுமேரிய - பாபிலோனிய சட்டக் குறியீட்டைப் போன்ற பல விஷயங்களைக் கொண்டுள்ளது. மேலும் அந்த சட்டக் குறியீடுகளைப் போல் அல்லாமலும் பல விஷயங்கள் உள்ளன. ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால், மோசேயின் நியாயப்பிரமாணம் எந்த நபர்களையும் மதிக்கவில்லை. Moses' law is no respecter of persons "சுதேசிக்கும் உங்களிடத்தில் தங்கும் பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கக்கடவது என்றார்." (யாத்திராகமம் 12:49, லேவியராகமம் 24:22 மற்றும் எண்ணாகமம் 15:16, 29) மீண்டுமாக, "தீமைசெய்ய திரளானபேர்களைப் பின்பற்றா திருப்பாயாக; வழக்கிலே நியாயத்தைப் புரட்ட மிகுதியானவர்களின் பட்சத்தில் சாய்ந்து, உத்தரவு சொல்லாதிருப்பாயாக. வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக" (யாத்திராகமம் 23:2-3) "நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக."(லேவியராகமம் 19:15)"நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக; முகதாட்சிணியம் பண்ணாமலும்; பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும். "(உபாகமம் 16:19) அது "கண்ணுக்கு கண், பற்களுக்கு பல்" (யாத்திராகமம் 21:23-24 , லேவியராகமம் 24:19-20),செல்வந்தர்களோ, பொது மக்களோ, அல்லது அந்நியர்களோ, யாராக இருந்தாலும், ஒரு கண்ணுக்கு இரண்டு கண்களோ, அல்லது ஒரு பல்லுக்கு நான்கு மூன்று பற்களோ அல்ல. மோசேயின் பிரமாணம் தனிநபர்களை பொருத்து இல்லை.

### நல்ல ஆரோக்கியத்திற்கான சட்டங்கள்

"உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம்நாளிலே விருத்தசேதனம்பண்ணப்படவேண்டும்; வீட்டிலே பிறந்த பிள்ளையும் உன் வித்தல்லாத அந்நியனிடத்தில்

பணத்திற்குக் கொள்ளப்பட்ட எந்தப் பிள்ளையும், அப்படியே விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்." (ஆதியாகமம் 17:12, லேவியராகமம் 12:3) என்று தேவன் ஆபிரகாமுக்கு கட்டளையிட்டார். ஏன் எட்டாவது நாள் செய்ய வேண்டும்? சாதாரண இரத்த உறவுக்கு வைட்டமின் கே (Vitamin K) மற்றும் புரோத்ராம்பின் prothrombin (உறைகல் காரணி clotting factor II) தேவைப்படுகிறது. இந்த இரண்டுமே, குடல் பாக்டீரியாவால் ஒருங்கிணைக்கப் படுகின்றன. "வைட்டமின் கே குழந்தையின் குடலில் உற்பத்தி செய்யப்படாவிட்டால், வாழ்க்கையின் ஐந்தாவது முதல் ஏழாம் நாள் வரை, விருத்தசேதனம் செய்வதற்கான முதல் பாதுகாப்பான நாள் எட்டாவது நாளாக இருக்கும் என்பது தெளிவாகிறது." ஒரு குழந்தை பிறந்த மூன்றாம் நாளில், கிடைக்கக்கூடிய புரோத்ராம்பின் இயல்பில் மூன்றில் ஒரு பங்காகும், எந்தவொரு அறுவை சிகிச்சையிலும் கடுமையான இரத்தக்கசிவு அபாயம் ஏற்படலாம். ஆனால் எட்டாவது நாளில் புரோத்ராம்பின் செறிவு தற்காலிகமாக இயல்பாக 110 சதவீதமாக உயர்கிறது. ஆகவே, வைட்டமின் கே மற்றும் புரோத்ராம்பின் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு.... விருத்தசேதனம் செய்ய சரியான நாள் எட்டாவது நாள் என்று முடிவெடுக்கப்பட்டது. நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வைட்டமின் கே மற்றும் புரோத்ராம்பின் பற்றி மோசே அல்லது ஆபிரகாம் என்ன அறிந்திருக்க முடியும்? ஆனால் சிருஷ்டிகருக்கு ஏற்கனவே தெரியும்.

**கைகளை கழுவுதல்**

யூத ஹங்கேரிய மருத்துவரான இக்னால் பிலிப் செம்மல்வீஸ் 1846 ல் வியன்னா பொது மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத்தின் பேராசிரியரின் உதவியாளராக ஆனார். 1847 ஆம் ஆண்டில், சடலங்களைத் தொட்டபின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கைகளை நன்கு கழுவ வேண்டும் என்று அவர் கோரத் தொடங்கினார். இறப்பு விகிதம் குறைந்தபோது, நோயாளிகளுக்கு இடையிலும் கைகளை கழுவ வேண்டும் என்று கோரினார். இறப்பு விகிதம் 10-20% முதல் 1-2% வரை குறைந்தது, ஆனால் சிரமத்திற்கு ஆளானவர்கள் கோபமடைந்தனர்!. அவரது இரண்டு ஆண்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்ப டவில்லை, அவர் வியன்னாவில் கைவிடப்பட்டார், எனவே அவர் மீண்டும் புடா -பெஸ்ட்க்கு ( Buda-Pest )சென்றார். அங்கு அவரது அனுபவம் மீண்டும் செயின்ட் ரோகஸ் மருத்துவமனையில் தொடர்ந்தது. 1861 ஆம் ஆண்டில் அவர் " குழந்தைக் காய்ச்சலின் நோயியல் மற்றும் நோய்த்தடுப்பின் கருத்துக்களில்" தனது வெற்றியைப் எழுதினார். ஆனால் அது சரியாக எழுதப்படவில்லை, எனவே அது ஐரோப்பாவில் ஏளனம் செய்யப்பட்டது. அவர் பைத்தியம் என்று ஜனங்கள் நினைத்தார்கள், எனவே அவரை1865 ஆம் ஆண்டில் ஒரு பைத்தியக்காரர் விடுதியில் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் அடிக்கப்பட்டு மரித்துபோனார்.

அடுத்த இரண்டு சகாப்தங்களில், லூயிஸ் பாஷர் கிருமிக் கோட்பாட்டை உருவாக்கினார். ஜோசப் லிஸ்டர் ஆண்டிசெப்டிக் அறுவை சிகிக்சைக்கு antiseptic surgery முன்னோடியாக இருந்தார் (1865), ஆல்பர்ட் பில்ரோத் ஸ்ட்ரெப்டோகோகி மற்றும் ஸ்டே∴பிளோகோகி (1874)ஆகியவற்றைக் கண்டுபிடித்தார். மேலும் ராபர்ட் கோச் பாக்டீரியாவை அடையாளம் காண்பதற்கான ஒரு கறை staining நுட்பத்தை உருவாக்கினார். (1877) அப்போது தான் செம்மல்வீஸின் நடைமுறை உலகெங்கிலும் உள்ள மருத்துவமனைகள் முழுவதும் பரவத் தொடங்கியது. இவ்வாறாக, முப்பத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முந்தைய வழிமுறைகளை ஜனங்கள் இப்போது கண்டுபிடித்தனர் :ஒரு சிவப்பு கிடாரி, கேதுரு மரக்கட்டையையும், ஈசோப்பையும் கொண்டு ஒரு கிரிமி நாசினியை (antiseptic)ஆயத்தம் செய்யும் போது, "தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, அதின்பின்பு பாளயத்தில் பிரவேசித்திருப்பார்கள்......சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். செத்துப் போனவனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்...அவன் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தீட்டுக்கழிக்கும் ஜலத்தினால் தன்னைச் சுத்திகரிக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாவான்; மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் தன்னைச் சுத்திகரிக்காமலிருப்பானாகில் சுத்தமாகான்..... கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கடுத்த நியமமாவது: அந்தக் கூடாரத்தில் பிரவேசிக்கிற யாவரும் கூடாரத்தில் இருக்கிற யாவரும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பார்கள்.மூடிக் கட்டப்படாமல் திறந்திருக்கும் பாத்திரங்கள் எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும். வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனித எலும்பையாவது, பிரேதக்குழியையாவது, தொட்டவன் எவனும் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.... தீட்டுப்பட்டிருக்கிறவன் தன்னைச் சுத்திகரித்துக் கொள்ளாதிருந்தால், அவன் சபையில் இராதபடிக்கு அறுப்புண்டுபோவான்; அவன் கர்த்தரின் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்;" (எண்ணாகமம் 19)

நியாயப்பிரமாணம் மற்ற பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்கிறது. தொழுநோயாளிகளை தனிமைப் படுத்துகிறது. (லேவியராகமம் 13:46) இரத்தம் மற்றும் மிருகங்களின் கொழுப்பை சாப்பிட, இஸ்ரேயலுக்கு தடை விதித்தது. (லேவியாராகமம் 3:17) நோய்கள் இரத்தத்தின் வழியாக கொண்டு செல்லப்படுகின்றன, மேலும் கொழுப்பு நவீனமான இருதய நோயுடன் தொடர்புடைதாக உள்ளது. ஒவ்வொரு வாரமும் ஏழாம் நாள் ஓய்வுநாளாக கடைப்பிடிக்கும் படி இஸ்ரேயலுக்கு கட்டளையிடப்பட்டது. (உபாகமம்5:14-15 . ஜனங்கள் ஓய்வெடுப்பதற்கு முயற்சிக்காத போது அவர்களது சக்தி படிப்படியாக குறைவதை கண்டார்கள்.)

இஸ்ரயேலில் தொற்றுநோயியல் நிபுணர் ஜேம்ஸ் எ.ஃப். ஜெக்கல் இவ்வாறு குறிப்பிட்டார் :" சமூகம் புனித மாகவும், சுத்தமாகவும் இருப்பதை கண்காணிக்கவும், பிரச்சனைகளைக் கண்டறிந்து, சிகிச்சையளிக்கவும், குணமடைந்தவர்களை சுத்தமானவர்கள் என்று அறிவிக்கவும், ஆசாரியர் சுகாதார அதிகாரியாக பணியாற்றினார்கள்.

நான்கு நூற்றாண்டுகளில் நாற்பது முதல் எண்பது வயது வரை ஆயுட்காலத்தை அதிகரித்தது. முதன்மையாக நவீன மருத்துவத்தின் வருகையை விட பொது சுகாதார நடைமுறைகளில் முன்னேற்றமே இதற்கு காரணமானது. "சுகாதாரப் புரட்சி என்பது பலரின் தனிப்பட்ட நம்பிக்கைகளிலிருந்து வந்தது, அவை ஓரளவு வேதாகமத்தில் இருந்தன, சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கநெறிகள் அசுத்தமாக இல்லாமல் தூய்மையுடன் வாழ்வது நல்லது" என்று ஜெக்கல் கூறினார். ராக்பெல்லர் அறக்கட்டளையின் ரெனே டுபோஸின் உலகப் புகழ்பெற்ற பாக்டீரியாலஜிஸ்ட்டின் bacteriologist மேற்கோளை இங்கு ஜெக்கல் கூடுதலாக சேர்க்கிறார்:" நகர்ப்புறம் மற்றும் தொழில் துறை நாகரீகத்தால் உருவாக்கப்பட்ட குழப்பங்களை நவீன மருத்துவ அறிவியல் சுத்தம் செய்ய உதவியது என்பது தெளிவாகிறது. எவ்வாறாயினும், ஆய்வக மருத்துவம் திறம்பட வெளியாக்கப்பட்ட அந்த நேரத்தில், மனிதாபிமானங்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் இந்த வேலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இயற்கை புனிதமானது மற்றும் ஆரோக்கியம் விஞ்ஞான ரீதியானது என்ற அவர்களின் நேசமான கோட்பாடுகள் அனுபவமற்றதாக இருந்தது. அவர்களின் வயதின் மிக முக்கியமான சுகாதார பிரச்சினைகளுக்கு எதிராக திறம்பட இது நிரூபிக்கப்பட்டது. கடற்கரையில் அலை குறையும் போது, ஒரு பாத்திரத்தைக் கொண்டு தண்ணீரை அகற்றுவதன் மூலம் ஒருவர் கடலைக் காலி செய்யலாம் என்று எண்ணுவது எளிதானது. அதுபோல கடந்த நூற்றாண்டின் இறுதியில், ஆய்வக விஞ்ஞானிகள் செயலுக்கு வந்தபோது, தொற்று நோய்கள் மற்றும் ஊட்டச்சத்துகளின் நோய்களின் அலை வேகமாக குறைந்தது."

ஜெக்கல் ஒரு சுருக்கத்துடன் தொடர்கிறார். (பின்வரும் அட்டவணையை பார்க்கவும்):

"ஆரோக்கியம் என்பது ஒரு புனிதமான மற்றும் தூய்மையான வாழ்க்கை முறையிலிருந்து பெறப்படுகிறது, மாறாக குணப்படுத்துபவர்களின் சேவைகளை விலைக்கு வாங்குவதிலிருந்து பெறப்படுவதில்லை என்று வேதாகமத்தில் ஆழமான பார்வை கூறுகிறது. நாம் விரும்பும் ஆரோக்கியத்தின் அளவை நம்மால் முடிந்த விலையில் அடைய வேண்டுமானால், நமது சமூகத்தால் மீட்கப்பட வேண்டிய ஒரு முன்னோக்காகும்".

ஆனால் யார் மனித நடத்தையை திருப்ப முடியும் ? நாம் எவ்வாறு நடந்துகொள்கிறோம் என்பது நாம் இறுதியில் மாபெரும் மதிப்பு என்று நம்புவதிலிருந்து பெறப்படுகிறது என்று சொல்வது போதுமானது, மேலும், இங்கே, தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் முன்னுரிமைகளை தீர்மானிப்பதில், மதமானது ஆரோக்கியத்தில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

"நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்."(யாத்திராகமம் 15:26)

# பழைய ஏற்பாட்டு சுகாதார குறியீட்டிலிருந்து பிரதிநிதித் தேர்வுகள்

## (முக்கிய புத்தகம் : லேவியாரகம் 19:2, 10:10)

1. தனிப்பட்ட தூய்மை

   *கைகளை கழுவுதல், குறிப்பாக சாப்பிடுவதற்கு முன் (மாற்கு7:1-3)

   * தீட்டுப்பட்டதற்கு பின் முழு சரீரத்தையும் கழுவவேண்டும் (லேவியராகமம் 15:5)

   *தீட்டுப்பட்டதற்கு பின் வஸ்திரங்களையும் துவைக்கவேண்டும். (லேவியாராகமம் 11:28,15:5)

2. தூய ஜலம் வழங்குதல் -

   இறந்த விலங்குகளால் மாசுபடுத்தப்பட்ட தண்ணீரைத் தவிர்க்கவும் (லேவியராகமம் 11:32-36)

3. கழிவுநீர் அகற்றுதல்

   அதை பாளையத்திற்கு வெளியே புதைக்கவும் (உபாகமம் 23:12-14)

4. இறந்தவைகளை விரைவில் புதைக்கவும்

   இரவு நேரத்திற்கு முன் (உபாகமம் 21:23)

5. தூய உணவுகள்

   *பழங்கள் மற்றும் காய்கறிகள் தடைசெய்யப்படுவதில்லை

   *மாம்ச உணவு (லேவியராகமம் 11:2-8,29-31)

   * மீன்கள் (லேவியராகமம் 11:9-12)

   *இறந்த விலங்குகளை உண்ண வேண்டாம் (உபாகமம் 14:21)

   *பழைய உணவை சாப்பிட வேண்டாம் (லேவியராகமம் 19:5-8)

6. தனிமைப்படுத்தல்

   *ஒருவர் இறந்தவர்களைத் தொட்டால் (லேவியராகமம்5:2,22:4)

   *ஒருவர் அசுத்தமான வெளியேற்றங்களைத் தொட்டால் (லேவியராகமம்5:3)

   * வெளியேற்றம் கொண்டவர்களுக்கு (லேவியராகமம் 15:1-13)

   *தோல் நோய்கள் உள்ளவர்களுக்கு (லேவியராகமம் 13)

   *பிரசவத்தைத் தொடர்ந்து ஒரு பெண் இருந்தால் (லேவியராகமம்12:1-8)

   ("குழந்தை காய்ச்சல்" என்ற தொற்றுநோயைத் தடுக்கிறது)

   *கடைசியாக கிருமி நீக்கம்(லேவியராகமம் 15:1-13,14:34-48)

7. பால்வினை நோயைக் கட்டுப்படுத்துதல் (ஒழுக்கம், யாத்திராகமம் 20:14, லேவியராகமம் 18:20)

8. ஆசாரியன், சுகாதார அதிகாரி (லேவியராகமம் 13,14)



Ray Charlton

# இயேசுவே மேசியா

"பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது." (யோவான் *19:19*)

முதல் நூற்றாண்டிலிருந்து கிறிஸ்தவம் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இயேசுவின் போதனைகள் புதிய ஏற்பாட்டில் பாதுகாக்கப்பட்டு, நூற்றுக்கணக்கான மில்லியன் ஜனங்களால் படிக்கப்பட்டு, பின்பற்றப்படுகின்றன. இதையும் மீறி, அவருடைய இருப்பை கேள்விக்குள்ளாக்குபவர்கள் மற்றும் அவருடைய போதனைகளின் உண்மைத்தன்மையைக் குறித்து சந்தேகம் கொண்டவர்களும் உள்ளார்கள். ஆரம்பகால வரலாற்று ஆதாரங்களின் பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் என்று குறிப்பிடுகின்றன. இதற்கு அப்பால், அஞ்ஞானிகள் புதிய ஏற்பாட்டு தாமே வேத வரலாற்றின் நம்பகமான கதை தானா என சந்தேகிக்கின்றனர்.

இந்த சவால்களை கருத்தில் கொண்டு, நாங்கள் சில அடிப்படையான கேள்விகளைக் கேட்கிறோம் : எந்த அடிப்படையில் நாம் இயேசுவை நம்புகிறோம் ? விசுவாசம், ஆதாரங்களை நியாயமான முறையில் கருத்தில் கொண்டது.

## இயேசுவின் இறப்புக்கான மதச் சார்பற்ற சான்றுகள்

### முதல் நூற்றாண்டு குறிப்புகள்

புதிய ஏற்பாட்டை தவிர இயேசுவைப் பற்றிய ஆரம்பகால குறிப்புகள் கி.பி 55 ல் வரலாற்றாசிரியரான தல்லஸின் (Thallos)எழுத்துக்களில் உள்ளது. துரதிர்ஷ்டவசமாக, அவரது அசல் எழுத்துக்கள் தொலைந்துவிட்டது, ஆனால் பின்னர் வந்த வரலாற்றாசிரியர்கள் அவற்றை மேற்கோள் காட்டுகிறார்கள். (1) இயேசு சிலுவையில் அறையப்பட்ட நேரத்தில் வந்த இருளைப் பற்றி தல்லோஸ் குறிப்பிடுவதாக தெரிகிறது. இருப்பினும், அசல் எழுத்துக்கள் வரலாற்றில் இழக்கப்பட்டதால், இந்த குறிப்புகளின் சான்றிதழ் குறைந்து வருகிறது. (2) ஒரு ரோமானிய அதிகார சபை அங்கத்தினர் மற்றும் டசிட்டஸ் என்ற வரலாற்றாசிரியரிடமிருந்து ஒரு உறுதியான கணக்கு வருகிறது. (3)( 56-120 AD)அவர் இயேசுவின் இறப்பை உறுதிப்படுத்தினார், மேலும் இயேசுவின் மரணம் குறித்த சில வரலாற்று விவரங்களையும் உறுதிப்படுத்துகிறார். இதன் விளைவாக, அறிக்கையை நீக்கும்படியாக, நீரோ மன்னன் அதை குற்றம் என்று உறுதிப்படுத்தினார். மேலும், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்ட ஜனங்களை அவர்களின் அருவருப்புக்காக வெறுக்கப்பட்டு, மிக நேர்த்தியான சித்திரவதைகளைச் செய்தார். இந்த பெயரின் தோற்றம் கொண்ட கிறிஸ்டஸ், டைபீரியஸின் ஆட்சியின் போது, தண்டனையாளர்களில் ஒருவரான பொன்டியஸ் பிலாத்துவின் கைகளால் கடுமையான தண்டனையை அனுபவித்தார். மேலும் இந்த தருணத்தில் தடுக்கப்பட்டிருந்த மிக விளையாட்டுதனமான மூடநம்பிக்கை, யூதேயாவில் மட்டும் அல்ல, தீமையின் முதல் பிறப்பிடமாகிய ரோமாவிலும், உலகின் ஒவ்வொரு பகுதியிலும் அருவருப்பான மற்றும் வெட்கக்கேடான விஷயங்கள் அனைத்தும், அவற்றின் மையத்தைக் கண்டுபிடித்து பிரபலமடைந்தது. இந்த ஒற்றை வரலாற்று மேற்கோளில், இயேசுவின் இறப்பு பற்றிய மதச்சார்பற்ற சான்றிதழ் நம்மிடம் உள்ளது, மேலும் சுவிசேஷங்கள் விவரிக்கிறபடி, பொந்தியு பிலாத்துவின் கைகளில் இயேசு உண்மையில் இறந்தார்.

நன்கு அறியப்பட்ட யூத வரலாற்றாசிரியரான ஜோசபஸ் (கி.பி 37 முதல் கி.பி 100), யூதர்களின் பழங்கால புத்தகத்தில் (*The Antiquities of the Jews*)இயேசுவை இரண்டு முறை குறிப்பிட்டுள்ளார். "பெதஸ்து இப்போது இறந்துவிட்டார். அல்பேனஸ் சாலையில் இருந்தார், ஆகவே, அவர் (பிரதான ஆசாரியன் அனனியா) நியாயசங்கத்தை கூட்டி, கிறிஸ்து என்று அழைக்கப்பட்ட இயேசுவின் சகோதரரை அவர்களுக்கு முன் கொண்டுவந்தார். அவரின் பெயர் யாக்கோபு, மற்றும் இன்னும் சிலர்...(அல்லது, அவரது தோழர்கள் சிலர்) சட்டத்தை மீறுபவர்கள் என்று அவர் அவர்களுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை உருவாக்கியபோது, அவர் அவர்களை கல்லெறியும்படி ஒப்புக்கொடுத்தார்."

இரண்டாவதாக, டெஸ்டிமோனியம் ∴பிளேவியம் (*Antiquities* 18.3.3) இது பெரும்பாலும் உண்மையானதாக தோன்றுகிறது. எட்வின் யமாச்சி எழுதிய உரை இங்கே

காணப்படுகிறது. "இந்த நேரத்தில் ஒரு ஞானியாக இயேசு வாழ்ந்தார் (உண்மையில் ஒருவர் அவரை ஒரு மனிதன் என்று அழைக்க வேண்டும் ) ஏனென்றால் அவர் ஆச்சரியமான செயல்களைச் செய்தவர், உண்மையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்பவர்களுக்கு அவர் ஆசிரியராக இருந்தார். அவர் பல யூதர்களையும், பல கிரேக்கர்களையும் வென்றார். (அவர் கிறிஸ்து) பிலாத்து, நம்மிடையே உயர்ந்த மனிதர்களால் குற்றம் சாட்டப்பட்டதைக் கேட்டு, அவர் சிலுவையில் அறையப்படுவதைக் கண்டித்ததுபோல, முதலில் அவரை நேசிக்க வந்தவர்கள் அவர்மீதுள்ள பாசத்தை விட்டுவிடவில்லை. (மூன்றாம் நாளில் அவர் அவர்களுக்கு உயிர்ப்பிக்கப்பட்டவராக தோன்றினார். ஏனென்றால் தேவனுடைய தீர்க்கதரிசிகள் இவற்றையும் அவரைப் பற்றிய எண்ணற்ற பிற அற்புதமான விஷயங்களையும் தீர்க்கதரிசனங்களாக உரைத்திருந்தார்கள்.) ஆகவே கிறிஸ்தவ கோத்திரங்கள், அவருக்கு பின் இவ்வாறாக (கிறிஸ்தவர்கள்)அழைக்கப்பட்டார்கள். இந்நாள் வரையிலும் இது மறைந்துபோகவில்லை.

அகபியஸின் அரபிய பதிப்பு, "அவர் கிறிஸ்து (மேசியா) மற்றும் உண்மையில் ஒருவர் அவரையே ஒரு மனிதன் என்று அழைக்கவேண்டும்" என்ற வரியை தவிர்க்கிறது, எனவே இவைகளை உறுதிப்படுத்தப் படாதவைகளாக நாம் கருதவேண்டும். இதேபோல் அகபியஸ் "உண்மை" என்ற வார்த்தையை தவிர்க்கிறார். "அவர் தோன்றிய மூன்றாம் நாளில்... அவரைப் பற்றிய அற்புதமான விஷயங்களை பற்றி அவர்கள் அறிக்கை யிட்டார்கள்" என்று அகபியஸ் கூறுகிறார். ஜோசபஸ் அதை அறிவித்தார் என்று நாம் ஏற்றுக்கொள்ளலாம், ஆனால் அவர் அதை நம்பியிருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை.

எம்மாவு பதிவிலிருந்து (லூக்கா24:13-27 )பெறப்பட்ட கணக்கிலிருந்து ஜோசபஸ் நகலெடுத்தாரா என்பதாகப் பார்க்கப்படுகிறது.

சுருக்கமாக, இந்த இரண்டு மதச்சார்பற்ற பண்டைய வரலாற்றாசிரியர்களிடமிருந்து நாம் என்ன முடிவுக்கு வர முடியும் ? கீழ்காணும் காரியங்களை நாம் நம்பலாம்:

(1) இயேசு நிச்சயமாக முதல் நூற்றாண்டில் இருந்த ஒரு மனிதர்.

(2) அவருக்கு யாக்கோபு என்ற சகோதரர் இருந்தார்.

(3)கிரேக்க மொழியில் அவர் கிறிஸ்டோஸ் என்று அழைக்கப்பட்டார்.

(4)திபேரியு இராயன் ஆட்சியில், பொந்துயு பிலாத்து ஆளுநராக இருந்தபோது அவர் மரத்தில் தூக்கப்பட்டார்.

(5)அவர் சிலுவையில் அறையப்பட்டார், இது மரண தண்டனைக்குரிய ரோமானிய முறையாகும்.

(6)அவர் யூதர்களையும் புறஜாதியினரையும் பெருமளவில் பின்னடியார்களாகக் கொண்டிருந்தார், அதினால் நீரோவின் ஆட்சியில் அவர்கள் கி. பி 64 இல் எரியும் ரோமுக்கு பலியாடுகளாக இருந்தனர்.

ரோமானிய மாகாணமான சிரியாவிலிருந்து வந்த ஒரு தத்துவ ஞானி மார் பார்- செராபியனின் Mar Bar-Serapion கடிதத்தில் இயேசுவைப் பற்றி மற்றொரு குறிப்பு காணப்படுகிறது. பெரும்பாலான அறிஞர்கள் கி. பி 73 சற்று பின் நிகழ்ந்ததாக கணக்கிடுகிறார்கள். ஒரு கைதியாக அவர் இருந்தபோது இது அவரது மகனுக்கு எழுதப்பட்டது. ஒரு முக்கிய பத்தியின் ஒரு பகுதியை இங்கே காணலாம்:

"ஞானிகள் கொடுங்கோலர்களால் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்படும்போது, அவர்களுடைய ஞானம் அவமதிப்புகளால் பிடிக்கப்பட்டு, பாதுகாப்பு இல்லாமல் அவர்களின் மனம் ஒடுக்கப்படும் போது நாம் என்ன சொல்ல முடியும்? சாக்ரடீஸைக் கொலை செய்ததினால் அத்தேனியர்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? அவர்கள் செய்த குற்றத்திற்கு, பஞ்சமும், பிளேகும் அவர்கள் மேல் வந்தது. பித்தகோரஸை எரித்ததினால் சமோஸின் ஜனங்கள் என்ன நன்மையைப் பெற்றார்கள்? யூதர்கள் தங்கள் ஞானமுள்ள இராஜாவை கொன்றதன் மூலம் அவர்களுக்கு என்ன நன்மை கிடைத்தது? ஒரு கணத்தில் அவர்களின் நிலம் மணலால் மூடப்பட்டது. அதற்குபின் அவர்களின் இராஜ்யம் ஒழிக்கப்பட்டது. தேவன் இந்த மூன்று ஞானிகளையும் நியாயமாக பழிவாங்கினார் :அத்தேனியர்கள் பசியினால் மரித்தார்கள். சாமியர்கள் Samians கடலில் மூழ்கினார்கள். யூதர்கள் பாழாக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திலிருந்து விரட்டப்பட்டு, முழு உலகத்திலும் சிதறடிக்கப்பட்டனர். ஆனால் பிளேட்டோவினால் சாக்ரடீஸ் மரிக்கவில்லை, ஜூனோவின் சிலையினால் பித்தகோரஸும் மரிக்கவில்லை, ஞானமுள்ள இராஜாவும் மரிக்கவில்லை. அவர்கள் திட்டப்படுத்திய "புதிய பிரமாணமே" இவர்களின் மரணத்திற்கு காரணம். (7)

மார் -பார் - செராப்பியன் ஒரு கிறிஸ்தவர் அல்ல. ஆனால் அவர் இப்பகுதியின் வரலாற்றை நன்கு அறிந்திருந்தார். இங்கே "ஞானமுள்ள இராஜா" இயேசு.

கி.பி 70-73ல் ரோமர்களால் யூதர்கள் தண்டிக்கப்பட்டதை இயேசுவின் மரணதண்டனையோடு அவர் இணைக்கிறார். மேலும் இந்த "புதிய பிரமாணம்" பற்றிய ஒரு சுவாரஸ்யமான குறிப்பை கொடுத்திருக்கிறார். இயேசுவின் போதனைகளை அவர் அறிந்திருக்கவில்லை என்றாலும், அந்த பண்டைய உலகில் கிறிஸ்தவர்களின் வித்தியாசமான நடத்தையை அவர் அடையாளம் கண்டார், மேலும் ஞானமுள்ள இராஜாவான இயேசுவின் "புதிய பிரமாணத்தின்" போதனையே இதற்கு காரணம் என்று கூறினார்.

முதல் நூற்றாண்டின் குறிப்பாக, இது இயேசுவின் இறப்புக்கான ஆதாரங்களை வலுவாக உறுதிப்படுத்துகிறது.

**இரண்டாம் நூற்றாண்டு குறிப்புகள்**

கி.பி 111-113 வரை ப்ளினி (Pliny) பொந்தி / பித்தினியாவின் ஆளுநராக இருந்தார். கி.பி 98-117 வரை ஆட்சி செய்த ரோமானிய பேரரசர் டிராஜனுக்கு Trajan அவர் கடிதம் எழுதினார் :

"கிறிஸ்தவர்களின் சோதனைகளில் நான் ஒருபோதும் பங்கேற்கவில்லை. எனவே என்ன குற்றங்களுக்காகத் தண்டிப்பது அல்லது விசாரிப்பது பற்றியும் எந்த அளவிற்கு என்பதைப் பற்றியும் எனக்குத் தெரியவில்லை. மேலும் வயதின் அடிப்படையில் வேறுபாடுகள் இருக்கவேண்டுமா அல்லது மிக இளம் வயதினருக்கும் முதிர்ச்சியுள்ளவர்களுக்கும் வித்தியாசம் இருக்க வேண்டுமா என்பதில் நான் கொஞ்சமும் தயங்கவில்லை. மனந்திரும்புதலுக்காக மன்னிப்பு வழங்கப்பட வேண்டுமா, அல்லது ஒரு மனிதன் ஒரு காலத்தில் கிறிஸ்தவராக இருந்து, அதற்குபின் அவர் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் அவருக்கு எந்த நன்மையும் இல்லையே. குற்றங்கள் இல்லாமல், வெறும் பெயர் மாத்திரத்தினாலேயா, அல்லது பெயருடன் தொடர்புடைய குற்றங்கள் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டுமா.

இதற்கிடையில், என்னிடம் வந்த கண்டிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் விஷயத்தில் பின்வரும் நடைமுறையை நான் கவனித்தேன்: இவர்கள் கிறிஸ்தவர்களா என்று விசாரித்தேன், ஒப்புக்கொண்டவர்களை நாம் இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக விசாரித்தேன், அவர்களை தண்டிப்பதாக அச்சுறுத்தினேன். தொடர்ந்து விடாப்பிடியாக இருந்தவர்களை தூக்கிலிட உத்தரவிட்டேன். கிறிஸ்தவர்கள் எவ்வாறு வணங்கினார்கள் என்றும், எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை பற்றியும் அவர் மேலும் விவரிக்கிறார். பேரரசர் டிராஜன் எழுதிய கடிதத்திற்கு வரலாற்றாசிரியர்கள் ஒரு பதிலைக் கொண்டுள்ளனர். இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், இயேசுவின் சீடர்கள், அவர்களது தொழுகையில் சுறுசுறுப்பாகவும், பகிரங்கமாகவும் செயல்பட்டார்கள் என்று இந்த கடிதம் நிரூபித்தது. வரலாற்றில் இல்லாத ஒரு நபரிடமிருந்து இது எதிர்பார்க்கப்படாது.

**அறிவுறுத்தல் இயேசுவே மேசியா என்பதற்கான விவிலிய சான்றுகள்**

வேதாகமத்திற்குள், இயேசுவின் ஊழியத்தை சித்தரிக்கும் ஏராளமான தீர்க்கதரிசனங்ளும் வகைகளும் உள்ளன. மதச்சார்பற்ற மற்றும் பகுத்தறிவின் அடிப்படையில் தீர்க்கதரிசனங்கள் விளக்க முடியாது என்று நிரூபிக்கிறது. சொல்லபோனால், வேதாகம பகுதிகளிலிருந்து எதிர்காலம் கணிக்கப்படுகிறது.

**பஸ்கா ஆட்டுக்குட்டி**

பஸ்கா வரலாற்று பாரம்பரியம் பல திரைப்படங்கள் மற்றும் வ ீடியோக்களாக பரந்த அளவில் வெளியிடப் பட்டிருப்பதால், பெரும்பாலான ஜனங்கள் அதைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள், (9) இந்த விவரிப்பின் பல முக்கியமான விவரங்களை நாம் மதிப்பிடும்போது, இயேசுவின் மரணத்தின் அனுபவத்தை எண்ணி நாம் பிரமிப்படைகிறோம். இயேசுவினால் தனியாக நிறைவேற்றப்பட்ட சில தீர்க்கதரிசனங்களை இங்கு நாம் காணலாம் :

(1)பஸ்கா ஆட்டுக்குட்டி நீசான் 14 ஆம் தேதி கொல்லப்பட்டது, இயேசுவும் அவ்வாறே இறந்தார். (லேவியாராகமம் 23:5)

(2)பஸ்கா ஆட்டுக்குட்டி பிற்பகல் 3 மணிக்கு கொல்லப்பட்டது. இயேசுவும் பிற்பகல் 3 மணிக்கு இறந்தார். (யாத்திராகமம் 12:6)

(3)பஸ்கா ஆட்டுக்குட்டியின் எலும்புகள் எதுவும் முறிக்கப்படவில்லை. இயேசுவின் எலும்புகள் எதுவும் முறிக்கப்படவில்லை .(யாத்திராகமம் 12:46)

(4)மோரியா மலையின் மேல் ஆபிரகாம் ஈசாக்கை பலி செலுத்த சென்றார். இயேசுவும் மோரியா மலையில் அல்லது மிக அருகில் சிலுவையில் அறையப்பட்டார்.

(5)மோசே செம்பு சர்ப்பத்தை மரத்தில் உயர்த்தினார். இயேசுவும் சிலுவையில் உயர்த்தப்பட்டார். (எண்ணாகமம் 21:9, யோவான் 3:14)

(6) இயேசுவின் ஆடைகள் சீட்டு போடப்பட்டு,

அவரிடமிருந்து எடுக்கப்பட்டது. (சங்கீதம் 22:18, மத்தேயு27:35)

இந்த தீர்க்கதரிசன சித்திரங்களும், இன்னும் பலவும், இயேசுவின் பிறப்புக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எபிரெய வேதாகமத்தில் இருந்தது. எதிர்காலத்தை அறிந்து கொள்வதற்கான எந்த இயல்பான விளக்கத்தையும் நாம் காணவில்லை. இது தேவனுடைய ஆதிக்கம். இயேசு கிறிஸ்து உண்மையில் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி என்றும் அவர் வழியாகவே பூமியிலுள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் அவர்கள் சான்றோடு அறிந்துகொள்ளும்படிக்கு அவர் அதை விசுவாசிகளுக்காக வழங்குகிறார்.

இயேசுவின் இருப்புக்கான சான்றுகள் பற்றிய மேலோட்டமான ஆய்வின் முடிவும், பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களை இயேசு நிறைவேற்றினார் என்ற வேதாகம சான்றுகளும், நம்முடைய விசுவாசம் நல்ல காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதையும், அடித்தல் இல்லாமல் இல்லை என்பதையும் நிரூபிக்கிறது. ஆகவே, இயேசுவை நம்முடைய ஆண்டவராகவும், எஜமானராகவும் ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுடன் அவரைப் பின்பற்றலாம். நாம் பெறும் வெகுமதி , இன்று - மன சமாதானம், பின்னர் - மனுக்குலத்தை என்றென்றும் ஆசீர்வதிப்பதற்கான வாய்ப்பு.

தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்திற்காக இஸ்ரயேலை கவனித்தல்

# இஸ்ரயேலின் சிதறடிப்புக்கான ஆதாரம் மற்றும் அலியா (Aliyah)



*Austin Williams*

"அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப் பண்ணுவேன்" (எரேமியா12:15)

பூமி முழுவதிலும் இஸ்ரயேலர்கள் தங்களது (இஸ்ரயேலரின் நிலம்) மூதாதையர்களின் தாயகமான தேசத்திலிருந்து யூதர்கள் அல்லது இஸ்ரயேலர்கள் வெளிநாடுகளில் சிதறடிக்கப்பட்டு, அடுத்தடுத்த இடங்களில் குடிபெயர்ந்ததே யூதர்களின் புலம்பெயர்தல் அல்லது சிதறடித்தல் என்பதாகும்.

எபிரெய வேதாகமத்தின் அடிப்படையில் "நாடுகடத்தப்படுதல்" என்பது, இஸ்ரயேலர்களின் தலை விதிப்படி இஸ்ரயேலின் இராஜ்யமானது கி.மு 8ம் நூற்றாண்டிலும், மற்றும் கி.மு.6ம் நூற்றாண்டிலும் யூதர்களின் இராஜ்யத்தில் யூதர்களும் நாடு கடத்தப்பட்டதைக் குறிக்கிறது. நாடுகடத்தப்பட்ட போது, யூதா கோத்திரத்தார் "யூதர்கள்" என்று அறியப்பட்டனர், யூதரான மொர்தெகாய் தான் இந்த வார்த்தையின் முதல் விவிலியக் குறிப்பாகும். (எஸ்தர் 2:5)

இரண்டாவது, ஆலயமானது வீழ்வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, யூதர்கள் பரவுதலானது இருந்துள்ளது. ஆனால் மற்ற நாடுகளில் அவர்கள் வசிப்பது வழக்கமாக கட்டாய இடப்பெயர்வின் விளைவாக இல்லை.

கி.பி முதலாம் நூற்றாண்டின் மத்திய பகுதிகளில், இன்னும் கூடுதலாக யூதேய, சிரியா மற்றும் பாபிலோனிய மற்றம் பெருமளவிலான யூத சமூகத்தின் முன்பதாகவே ரோமர்களின் மாகாணங்களான சிரியா, பாலஸ்தீனம், எகிப்து, கிரெட்டி மற்றும் சிரேனைக்கா மற்றும் ரோமின் பகுதிகளிலும் கூட வசித்திருந்தனர். கி.மு. 63ல் எருசலேம் முற்றுகையிடப்பட்டபோது ரோமை பாதுகாப்பதற்காக ஹாஸ்மோனியன் இராஜ்யமானது கட்டாய இடப்பெயர்வு செய்தது.

கி.பி6ல் அப்பகுதியை ரோம மாகாணமான யூதேயா நிர்வகித்து வந்தது. யூதர்களின் கிளர்ச்சியானது ரோமப் பேரரசிற்கு எதிரான புரட்சியாக கி.பி 66ல் முதலாவது யூத ரோம போராகத் துவங்கி, தொடர்ச்சியாக கி.பி. 70ல் எருசலேமின் அழிவோடு முடிவுற்றது. இரண்டாவதான முற்றுகையிடும் சமயத்தில், ரோமர்கள் பெரும்பாலான எருசலேமின் அழிவோடு முடிவுற்றது. இரண்டாவதான முற்றகையிடும் சமயத்தில், ரோமர்கள் பெரும்பாலான எருசலேமின் பகுதிகளையும் மற்றும் இரண்டாவது ஆலயத்தையும் அழித்துப்போட்டனர். அந்த நீர்ப்பாசன தருணமானது யூத சமயத்தின் அடையாளமான மையத்தினை நீக்கிவிட்டது. யூதர்கள் பலர் ஒரு புதிய வரையறையை சீரமைக்கவும் மற்றும் இடப்பெயர்வின் கால வரையற்ற காலம் வரையிலும் யூதர்கள் தங்களது அடையாளங்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

பழங்கால முதற்கொண்டே குடிபெயர்தல் / புலம்பெயர்தல் என்பது அநேக ஜனங்கள் மத்தியில் பொதுவானதாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இன்னும் குறிப்பாக யூதர்களின் புலம்பெயர்தலானது எதிர்மாறாக உச்சரிக்கப்படுகிறது. உண்மையில், மதம், மனோதத்துவ பாரம்பரியமான சிதறல் மற்றும் நாடு கடத்தல் ஆகிய சொற்களுடன் இணைக்கப்படுள்ளது. (GALUT-கலட்), இரண்டு நிபந்தனைகளினால், வெவ்வேறு ஆக்கக்கூறுகளாக்குகின்றன. ஆங்கிலச் சொல்லான (DIASPORA) புலம்பெயர்தல் என்பது, 1876 லே தான் பயன்பாட்டில் வந்தது மற்றும் எபிரெய பதமான (GALUT) கலட் என்பது, அதை ஒத்த ஆனால் சில தனித்துவமான வேறுபாட்டைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டது. முன்னோர்கள் எபிரெய பாரம்பரிய பயன்பாட்டின்படி இணையாக பயன்படுத்தவில்லை.

### புலம் பெயர்ந்தோரின் தோற்றம்

கிரேக்க பதமான DIASPORA புலம்பெயர்தல் (dispersion-சிதறல்) என்பது செப்டுவஜீன்ட் மொழிபெயர்ப்பின் பழைய ஏற்பாட்டில் புதிதாக தோன்றப்பெற்றதுடன், 14 இடங்களில் உள்ளது. eoe diaspora en narasis basileiasis tes ges(thou shalt be a

diaspora or dispertion in all kingdoms of earth) என்ற வாசகத்தோடு துவங்குகிறது. (நீ பூமியிலுள்ள எல்லா இராஜ்யங்களிலும் சிதறுண்டு போவாய்) (உபாகமம் 28:25 மற்றும் 2இராஜாக்கள் 17:23 இல் யூத நாடுகலிருந்து பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.)

ரோம யூத தேசிய அபிலாஷைகளை இருமடங்காக நசுக்கியதன் மூலம் ஜனங்கள் தொடர்ச்சியாக புலம்பெயர்ந்ததாக சிலரின் கூற்று காணப்படுகிறது. அதிகப்படியான ஐரோப்பிய யூதர்கள் புலம்பெயர்தலானது கி.பி 66 மற்றும் கி.பி 135 ஆகிய இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்ந்த யூதப் போரின் வாயிலாகவே தோற்றம் பெற்றிருக்கக்கூடும். இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களின் அடுத்தடுத்த ஆட்சியின் காரணமாகவும், மற்றும் ரோமர்கள் யூதேயாவை அழித்ததினாலும், பாபிலோனியர் யூதாவை அழித்ததினாலும், அசீரியர்களால் இஸ்ரயேல் அழிவுற்ற காரணத்தினாலும் இதன் துவக்கத்திலிருந்து அந்த நூற்றாண்டின் முழுமையிலும் யூத சமுதாயத்தினர் படிப்படியான செயல்பாட்டின்படியாக, புலம்பெயர்தலானது வளர்ச்சியடைந்திருக்கக்கூடும்.

ரோமருக்கு எதிரான புரட்சிக்கும் பிற்பாடு, யூத சமயம் மற்றும் அதன் கலாச்சார மையமும் பாபிலோனிய யூத சமுதாயமாகவும் மற்றும் அதன் அறிஞர்களும் மாற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து வந்த தலைமுறையினரும் அதனைப் பின்பற்றலாயினர். இரண்டாவது ஆலயமானது அழிவுற்றது, யூத ஜனங்களின் விசுவாசமற்ற நிலையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அவர்கள் உடைமையற்றவர்களாகவும், துன்புறுத்தப்பட்ட வர்களாகவும் காணப்பட்டதற்கு ஏராளமான வரலாற்றுப் பதிவுகள் இருக்கின்றன. ரோம பேரரசுக்கு விரோதமாக யூதர்கள் மத்தியில் கிளர்ச்சியின் காரணமாக புரட்சி உருவானது. அந்த புரட்சி பார் கோக்பா (Bar Kokba) புரட்சியாகும், அதனை ஏற்று நடத்தியவர், சைமன் யார் கோக்பா. முழுமையான குடிபெயர்தலின் காரணமாக இப்புரட்சியைப் பின்பற்றி வந்த ஜனங்கள் வெகுவாகக் குறையத் துவங்கினர்.

கி.பி 63ன் துவக்கத்தில், ரோமர்களின் ஆட்சியானது கி.பி 66-70 வரை ஏற்பட்ட புரட்சி வரையிலும் நீடித்தது. யூதர்களின் போராட்டமானது விடுதலைக் கானதாக இருந்த படியால் நான்கு வருடங்களுக்குப் பிறகு எருசலேமானது கவனம் கொண்டவர்களாகிய பார்தியா (பெர்சிய), பாபிலோனியா (ஈராக்) மற்றும் அரேபியா மற்றும் யூதர்கள் அமைந்துள்ளதாக அடியோபெனே (குர்திஸ்தான்) யூபிரெட்டஸில் உள்ளது. வட ஐரோப்பா மற்றும் அதைச் சேர்ந்த மேற்கு மத்தியத்தரைக்கடல் பகுதி (ஜோசபஸ், வார்ஸ், ப்ரீபேஸ் 1-2) (Aliyah "ascent",) அலியா "ஏற்றம்" என்பது எருசலேமை "மேலே செல்லுதல்" என்றதாகும். Aliyah ஏற்றம் (ascent) யூதர்கள் தங்களது இஸ்ரயேல் தேசத்துக்கு புலம்பெயர்ந்து இடம் பெயர்தல் ஆகும். மற்றும் "மேலே செல்லுதல்" அதாவது "எருசலேமை நோக்கி" - "ஏற்றத்தை உருவாக்குதல்" என்பது சீயோனிச கருத்துக்களின் அடிப்படையான ஒன்றாகவும் இஸ்ரயேல் நாட்டிற்கு கடந்து செல்வதையுமே குறிப்பிடுவதாக இருந்தது. இஸ்ரயேலர்களின் திரும்பி வரும் பிரமாணத்தின்படி யூதர்கள் மற்றும் அவர்களின் வழித்தோன்றலானவர்களும் குடியுரிமை மற்றும் வசித்தல் தொடர்பான உரிமைகளை தானாகவே பெற்றிருந்தனர்.

நாம் பெரும்பான்மையான யூத வரலாற்றினை பார்த்தோமாயின், பெருமளவிலான யூதர்கள் புலம்பெயர்ந்தே வாழ்ந்திருக்கின்றனர். மற்றும் ஏற்றமானது யூத ஜனங்களின் மத்தியில் தேசிய அளவிலான அபிலாஷையாக முன்னேற்றமடைந்திருந்தது. கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு சீயோனிச இயக்கமானது துவங்கும் முன்பே எப்போதாவது செயல்படுத்தப்பட்டிருந்த புலம் பெயர்தலானது நிறைவேறிற்று. சில யூதர்கள் பெட்டாடிக்வா (Petach Tigvah) என்ற இயக்கத்தை 1878ல் ஸ்தாபித்த வேளையில், 1882 லிருந்து பெருமளவில் யூதர்கள் பாலஸ்தீனாவுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்.

பழைய ஏற்பாட்டின் புத்தகங்களை பாரம்பரியமிக்க யூதர்கள் ஒழுங்கமைத்ததுடன், மூல எபிரெய வேதாகமத்தின் மிக கடைசியான வார்த்தை 2நாளா36:23 யாதெனில் (Veya'al) வேயா அல் (கட்டளை) இவ்விளைவடிவமானது அலியா என்ற அதே மூலத்திலிருந்து பெறப்பட்டது. அதாவது "அவர் மேலே செல்லட்டும்" (யூதாவின் எருசலேமுக்கு) என்பதாகும்.

2நாளா 36:23 - "அவருடைய ஜனங்கள் எல்லாரிலும் எவன் உங்களுக்குள் இருக்கிறானோ அவன் போகட்டும், அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடிப்பாராக என்று பேர்சியாவின் இராஜாவாகிய கோரேஸ் அறிவிக்கிறார்

என்று, தன் இராஜ்யம் எங்கும் எழுதியனுப்பி விளம்பரம் பண்ணினான்."

முதலாம் ஏற்றம். (First Aliya)ஓட்டொமான் பேரரசின், தென்மேற்கு பகுதியான சீரியாக மாகாணத்திலிருந்து சுமார் 35,000 யூதர்கள் 1882 மற்றும் 1903 ஆகிய ஆண்டுகளின் இடைப்பட்ட காலங்களில் இடம் பெயர்ந்தனர். 1880களில் ரஷ்யா மற்றும் ரோமானியாவிலிருந்து வந்தவர்களே பெரும்பான்மையானவர்களாக இருந்தனர். ரஷ்யாவிலுள்ள யூதர்களின் இடம்பெயர்தலானது ரஷ்யன் படுகொலைகளுடன் நிறைவுற்றுதுடன், (குடிபெயர்தலை தடுக்க வேண்டுமென்பதன் காரணமாக ), அதோடு 3 சதவிகித யூதர்கள் ஐரோப்பாவிலிருந்து பாலஸ்தீனாவுக்கு குடிபெயர்ந்தனர். இந்தக் குழுவினர் பாலஸ்தீனர்களிடமும் நேசமும் விருப்பமும் கொண்டிருந்தனர். பெரும்பான்மையானோர் ரஷ்யப் பேரரசிலிருந்தும், மிகக் குறைவான எண்ணிக்கையிலுள்ளவர்கள் ஏமனிலிருந்தும் வருகைபுரிந்தனர்.

இரண்டாம் ஏற்றம். (Second Aliya )ரஷ்யாவில் திடீரென ஏற்பட்ட யூத எதிர்ப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து படுகொலைககள் ஏற்பட்டதினால், அந்நாட்டிலிருந்து அதாவது ரஷ்யாவின் தென்மேற்குப் பகுதியான சிரியாவிலிருந்து 40,000 யூதர்கள் 1904 மற்றும் 1914ன் இடைப்பட்ட காலங்களில் இடம்பெயர்ந்தனர். இக்குழுவினர், சமூகவாத கொள்கைளினால் பெரிதளவில் பாதிப்படைந்ததினால், 1909ல் முதலாம் கிப்புட்ஸை ஸ்தாபனம் செய்ததுடன், அதிகரித்து வரும் அரபு விரோதத்தை எதிர்கொள்வதற்கும், யூதர்கள் தங்கள் சமுதாயத்தினரை அரேபிய கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க உதவுவதற்கும், அவர்கள் தற்காப்பு அமைப்புகளை உருவாக்கம் செய்தனர். முதல் உலகப்போரானது இரண்டாம் (அலியா) ஏற்றத்தை திறம்பட நிறைவுறச் செய்தது.

மூன்றாவது ஏற்றம். (Third Aliya) முதலாம் உலகப்போரின் எழுச்சிகள் விளைவாக முக்கியமாக கிழக்கு ஐரோப்பாவிலிருந்து 40,000 யூதர்கள் 1919 மற்றும் 1923 ன் இடைப்பட்ட காலங்களில் வருகை புரிந்தனர். பிரிட்டிஷ் பாலஸ்தீனாவை ஆக்கிரமிப்பு செய்ததுடன், 1917லில் பால் போர் அறிக்கையில் வெளியிடப்பட்ட வாக்குறுதிகளை பிரிட்டிஷ் கட்டாயமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்ற முடிவிலிருந்து யூதர்கள் மக்கள் தொகையானது 90,000 ஐ எட்டினதுடன் நிறைவுற்றது.

நான்காவது ஏற்றம். (Fourth Aliya)ஐரோப்பா முழுவதிலும் மற்றும் போலந்திலும் யூதர் எதிர்ப்பானது தீவிரமடைந்ததன் விளைவாக, 82,000 யூதர்கள் 1924 மற்றும் 1929 களின் மைய காலப்பகுதிகளில் வரலாயினர். யூனைடெட் ஸ்டேட்ஸிலும் இடம்பெயரும் ஒதுக்கீட்டிலிருந்து யூதாக்ள் வெளியேற்றப்பட்டனர். இக்குழுவினருள் பெரும்பாலும் நடுத்தர குடும்பங்களைச் சார்ந்தவர்ளாகையால், இவர்கள் வளரும் நகரங்களை நோக்கி நகர்ந்து, சிறிதளவிலான வியாபாரங்களை ஸ்தாபித்தும், மற்றும் விளக்குத் தொழிற்சாலையையும் கூட உருவாக்கினர். இதில் சுமார் 23,000 பேர் போலாந்திலிருந்து வந்தவர்கள்.

ஐந்தாவது ஏற்றம் (Fifth Aliya) 1929 மற்றும் 1939 மத்திய காலங்களில் ஜெர்மனில் எழும்பின புதிய அலைகளான நாசிஸத்தின் காரணமாக 2,50,000 பேர் குடிபெயர்ந்தனர். 1933 மற்றும் 1936ல் இடைப்பட்ட வருடங்களில் குடிபெயர்தல் பெருமளவில் 1,74,000 ஆக ஆனதால், பிரிட்டிஷ் குடிபெயர்த்தல் சட்டவிரோதமானது என ஆணை பிறப்பித்து தடைவிதிகளை அதிகரிக்கச் செய்தது. இதனை அலியா பந்தயம் எனவும் அழைத்தனர். ஐந்தாம் அலியாவானது கிட்டத்தட்ட முழு ஐரோப்பாவிலும் இயக்கப்பட்டிருந்ததினால், பெரும்பாலும் மத்திய ஐரோப்பா (குறிப்பாக போலந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றும் செக்கொஸ்லோவோக்கிய) வில். ஆனால் கிரிஸிசிலும் கூட ஐந்தாம் (அலியா) ஏற்றத்தில் ஜெர்மனிலுள்ள தொழிலாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் அடங்குவர். 1940ல் பாலஸ்தீனாவில் யூதர்களின் ஜனத்தொகையானது 4,50,000 மாகத் தொட்டிருந்தது.

குறுகிய காலத்தில் இவர்கள் அதிகாரம் பெற்றும் எழும்பினதினால், "இடமாற்றம் ஒப்பந்தம்" காரணமாக யூத முகவர்களிடம் நாசிசர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்த யூத முகமையின் கீழ் 55,000 ஜெர்மானிய யூதர்கள் இருந்தபடியால் மற்றும் 100 மில்லியன் டாலர் மதிப்பிலான இவர்களது சொத்துக்கள் பாலஸ்தீனாவுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

**ஆரம்பநிலை (1948-1960)**

ஏற்றம் (அலியா) பந்தயத்திற்குப் பிறகு, எண்ணிக்கையில் அல்லது பெயரளவிலாக தனிப்பட்ட அலியாட் பிடிக்கப்பட்டது. ஆனால் இடம்பெயர்தல் இல்லை. 1948 முதல் 1951 வரை அரபி மற்றும் இஸ்லாமிய பிந்தைய பேரழிவின் எதிரொளிகளே பெருமளவிலான யூதர்கள் இடம்பெயர்ந்ததற்கான காரணமாகும். இஸ்ரயேல் தேசமானது உருவாக்கப்பட்ட மூன்றாரை ஆண்டுகளில் அவர்கள் தேசத்தில் உட்புகும் போது இஸ்ரயேலின் ஜனங்கள் தொகையானது 6,50,000 இருந்தது. அவர்கள் வந்தபோது இருந்த ஜனத் தொகையை விட 6,88,000 மாக இருமடங்கு உயர்ந்திருந்தது. 1949 ம் வருடத்தில் மட்டும் இதுவரையிலும் இல்லாத பெருந்தொகையான இஸ்ரயேலர்கள் 2,49,954 பேர் வருகை புரிந்தனர். இந்த இடம்பெயர்வின் காலப்பகுதியானது கிப்புட்ஸ் கேலுயாட் (Kibbutz Galuyot) என்ற பல முறை அழைக்கப்படுகிறது. (எழுத்தின்படியாக, தங்கள் முதாதையர்களின் தாயாகத்திற்கு வருதல் என்பது பொருளாகும்.) பெரும் எண்ணிக்கையிலான யூத சமுதாயத்தினர் புலம்பெயர்ந்ததினால் (அலியா) ஏற்றம் உருவானது.

தங்கள் சொந்த வாக்களிக்கப்பட்ட தேசமான பாலஸ்தீனாவுக்கு திரும்புமாறு அறிவித்த சீயோனிச மீன்பிடிப்பவர்களை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாமல் தோல்வியுற்றதினால் இஸ்ரயேல் யூதாவை வைத்து (Aliyah)ஏற்றத்தின் பலனானது தேச முழுமையிலும் 1948 லேயே நோக்கி சென்றனர். 2018 ம் ஆண்டின்படி உலகமுழுவதிலும் 44.5% யூத ஜனங்கள் தொகையினர் இஸ்ரயேலில் வசிக்கின்றனர்.

**மீன் பிடிப்பவர்கள் - மற்றும் வேட்டைக்காரர்கள் எரேமியா 16:14-16**

தங்கள் தேசத்திற்கு திரும்பி வருமாறு "சீயோனிசம்" இயக்கத்தின் மூலமாக தேவன் மீன்படிப்பவர்கள் மூலம் அனுப்பியதை எரேமியா 16ம் அதிகாரத்தில் வெளிப்படுத்துகிறார். இம்முயற்சியானது தோல்வியைத் தழுவியதினாலேயே பிற்பாடு தேவன் வேட்டையாடுபவர்களை அனுமதித்தார். துன்புறுத்தப்பட்ட பின்பதாக யூதர்கள் தங்களுக்கு வாக்களிக்கப்பட்டதாக தேசத்திற்கு கடந்து வர வேண்டுமென்பதற்காகவே.

மோசஸ் மோன்டிபியொரி மனிதப் பற்றுடைய வராகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டபடியால், வெளிநாட்டிலுள்ள யூதர்களை சிறப்பாக மன அழுத்தத்தைப் போக்கினார். யூதர்களின் துன்புறுத்தலிலிருந்து அவர்கள் அனைத்து பிரச்சினைகளையும் சரி செய்யவும் பெரிதளவிலான மற்றும் சிக்கலான இயந்திரங்களை சரிசெய்யவும், இடம்பெயர்தல் மற்றும் விநியோகிக்கும் முகவர்கள், தொழில்நுட்பப் பள்ளிகள், கூட்டுறவு தொழிற்சாலைகள், சேமிப்புகள் மற்றும் வங்கிக் கடன்கள் மற்றும் குடியிருப்பு மாதிரிகள் ஆகியவற்றைய உள்ளடக்கிய ஒரு சங்கத்தை நிறுவினர். உலகமுழுமையிலும் உள்ள பெரும் எண்ணிக்கை அளவிலான சமுதாயத்தினரும் கூட உதவிபெற்று வந்தனர். இந்த வேலையில் தொடர்புடைய யூத அகதிகளுக்கு ஆறுதல் மற்றும் மறுவாழ்வு அளிப்பனவாகவுமிருந்தன.

ஏராளமான ரோத்ஸ்சைல்ட்ஸ் சீயோனிசத்துக்கு ஆதரவாளர்களாக இருந்தனர். 1917 இல் வால்டர் ரோதஸ்சைல்ட், 2ம் பாரன் ரேஷ்சைலட், பால்போர் அறிக்கையின் முனவரியாளராகயிலிருந்து சீயோனிசத்தை இணைத்து, பாலஸ்தீனாவில் யூதர்கள் தேசியமாக யூத ஜனங்களுக்கு இருக்க வேண்டும் என்பதாக பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டார். ஜேம்ஸ் ஜேக்கப் டி ரோத்ஸ்சைல்டு என்பதே பாலஸ்தீனாவிலுள்ள ரிஷோன் -லி சீயோன் முதலாவது பெரும் இருப்பிடத்தின் நில உரிமையாளராக இருந்தார். ஓட்டோமன் நில உரிமையளர்களிடமிருந்து பகுதியளவான நிலத்தை வாங்கிய பின், தற்பொழுது அதுவே தற்பொழுதுள்ள இஸ்ரயேலாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

"பாலைவனம்..... ரோஜாவாக மலரும்" என்று தொடங்குவதற்கு கருவியாக இருந்த ஒரு சிலர் இவர்கள்.

எரேமியா 16 இன் வேட்டைக்காரர்கள் குறிப்பாக 1937-1945 நாஜி படுகொலையில் தீவிரமாக இருந்தனர். யூதர்களின் யூத விரோத "வேட்டைக்காரர்களின்" எழுச்சி மீண்டும் தொடங்கியது. பிரிட்டன், பிரான்ஸ், ஸ்காட்லாந்து, சுவீடன் மற்றும் அமெரிக்காவில் யூத எதிர்ப்பு சம்பவங்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. 15 ஆண்டுகளுக்குள் ஐரோப்பாவிலிருந்து யூதர்கள் அனைவரும் இஸ்ரேயலுக்குத் திரும்புவார்கள் என்பது ஒரு கணிப்பாகும்.

**நம்முடைய ஆண்டவரின் முதல் மற்றும் இரண்டாம் வருகைக்கு இடையே உள்ள தொடர்பு**

ஏசாயா40:1,2: "என் ஜனத்தை ஆற்றுங்கள், தேற்றுங்கள்;எருசலேமுடன் பட்சமாய்ப்பேசி, அதின் போர் முடிந்தது என்றும், அதின் அக்கிரமம் நிவிர்த்தியாயிற்று என்றும், அது தன் சகல பாவங்களினிமித்தமும் கர்த்தரின் கையில் இரட்டிப்பாய் அடைந்து தீர்ந்தது என்றும், அதற்குக் கூறுங்கள் என்று உங்கள் தேவன் சொல்லுகிறார்."

நம்முடைய ஆண்டவரின் முதல் வருகையின் போது, அவர் ஆலயத்தைப் பற்றியும், "அந்த ஆலயம் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப் பட்டுப்போகும் ..." (மத்தேயு24:2) காலத்தைப் பற்றியும் பேசினார். கி.பி. 70ல் ரோமர்களால் எருசலேமின் ஆலயம் அழிக்கப்படும் எனபதை இயேசு தெளிவாக தீர்க்கதரிசனம் உரைத்தார். 1845 வருடங்கள் இரட்டிப்பின் முதல் பகுதி (சாதகமான) கி.பி 33 ல் முடிவடைந்தவுடன், நாடு நிராகரிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர்ந்தோரின் (சிதறடிப்பு) ஆரம்பம் விரைவில் வந்தது. நம்முடைய ஆண்டவர் திரும்பிய பிறகு, 1845 வருடங்களின் இரட்டிப்பின் இரண்டாவது பகுதி (வெறுப்பு) 1878 ல் முடிந்தது. பின்னர் அலியாக 1882 இல் தொடாங்கியது. அவர்களின் இரட்டிப்பு (துயரம்) முடிவில் துவக்கத்தில், எசேக்கியேல் 37 ல் உள்ள உலர்ந்த எலும்புகளின் தீர்க்கதரிசனத்தின்படி, இந்த மறுசீரமைப்பு, எலும்புகளை ஒருமித்து கொண்டுவருவதற்கான ஒரு செயல்முறையாகும். இது புலம்பெயர் தேசத்தில் இஸ்ரயேலின் உயிரற்ற தன்மையைக் குறிக்கிறது. (சிதறடிப்பு) 1948 ல் அவர்கள் ஒரு தேசமான போது, அவர்கள் மீது அடையாளமான தோல் வந்தது. பூமியில் உள்ள முழு குடும்பங்களும், ஏதேனின் தொலைந்த பரிபூரணத்திற்கு மீண்டும் வழிநடத்தப்பட, முற்பிதாக்களும், மீதியுள்ள இஸ்ரயேலரும், உயிர்த்தெழுந்து, தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படுவார்கள் என்று தீர்க்கதரிசனமாக நமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிசேஷ யுகத்தின் நிறைவுக்கான ஆதாரம்



**Brian Montague**

"அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, "(மத்தேயு*13:48-49*)

ஏறக்குறைய கடந்த 1990 ஆண்டுகளாக, சுவிசேஷ யுகம் என்று அழைக்கப்படும் ஒரு காலம் தற்போதைய காலம் வரையில் நீடித்துள்ளது. இவ்வளவு நீண்ட சகாப்தம் முடிவில்லாமல் தொடர்கிறது. பின்வரும் மூன்று குறிப்புகள் அதன் நன்மையை தேர்வுச் செய்கிறது: (1) நம்முடைய பரலோகத் தந்தை சுவிசேஷ யுகத்தை ஏன் முன்னரே தீர்மானித்தார்? (2) கர்த்தருடைய ஜனங்களாகிய நாம நமக்கு முன்பிருந்தவர்களாலும், சுவிசேஷ யுகத்தின் போது நிகழ்ந்த நிகழ்வுகளாலும் எவ்வாறு வடிவமைக்கப் பட வேண்டும்? (3) சுவிசேஷ யுகத்தின் நிறைவு நமக்கு எதை பொருள் படுத்தவேண்டும்?

நம்முடைய பரலோகத் தந்தை சுவிசேஷ யுகத்தை ஏன் முன்னரே தீர்மானித்தார் தேவனுடைய திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படும் என்பதில் தேவன் நிலையான நோக்கங்களை உடையவர் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. ஏசாயா 14:24 ஐ கவனிக்கலாம். "நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்." கூடுதலாக, "அவருடைய கிரியைகள் உலக தோற்றமுதல் முடிந்திருந்தும்..." என்று எபிரெயர் 4:4இல், அப்போஸ்தலன், நம்முடைய பரலோகத் தகப்பனைப் பற்றி குறிப்பிடுகிறார். இந்த பகுதி, ஆதியாகமத்தின் காரியங்களைப் பற்றி நமது புரிதலை மேம்படுத்துகிறது, அங்கு ஆறாம் சிருஷ்டிப்பின் நாளைத் தொடர்ந்து, தேவன் தனது எல்லா கிரியைகளிலிருந்து ஓய்ந்திருந்தார், அதாவது தேவனுடைய திட்டத்தில் அனைத்தும் முழுமையாக முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்ததைப் பொருள்படுத்துகிறது. ஏழாம் நாள் தொடங்கிய உடனே, இறுதியாக மனுக்குலத்தின் ஆசீர்வாதம் தெய்வீக அங்கீகரிப்புடன் முற்போக்கான முறையில் வரும். அப்போஸ்தலர்கள் பேசும் தெய்வீக உறுதிப்பாட்டின் மூன்று வெளிப்பாடுகளின் மூலம் இது வெளிவந்தது - அப்போதிருந்த உலகம், இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகம் மற்றும் இனிவரும் உலகம்.

இந்த உலகின் துவக்கதிலேயே, ஆதாம் பரிபூரணத்திலிருந்து விரைவாக விழுந்தார். ஆகவே அவருடைய சந்ததியினர், காலம் காலமாகஅவர் வழியாக பாவம், சீரழவு மற்றும் மரணத்தை சுதந்தரித்தார்கள். இருப்பினும், இரட்சிப்பு ஏற்படும் என்ற ஒரு நம்பிக்கையில் இருந்தது. ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தை அழித்து, தீமையை ஒழிக்கும் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (ஆதியாகமம் 3:15) இது முதல் உலகில், ஜலப்பிரளயத்திற்கு முன் ஏற்படவில்லை.

இந்த மூன்று உலகங்களில், இரண்டாவது (இப்போது இருக்கும் உலகம், அல்லது தற்போதைய தீமையான உலகம்)உலகத்தில் மூன்று தனித்தனியாக யுகங்கள் உள்ளது. முதலாவது முற்பிதாக்களின் யுகம், இதில் பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குத்தத்தம் கொடுத்த ஆபிரகாமும் இதில் அடங்குவார். ஆனால் இந்த யுகத்தில் இரட்சிப்பு வரவில்லை. அதற்குபின் யாக்கோபின் மரணத்திலிருந்து 70 வார தீர்க்கதரிசனத்தின் முடிவு வரை யூத யுகம் தொடர்ந்தது. (தானியேல் 9:24) தேவன் மாம்சத்தின்படி இஸ்ரயேலுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இராஜ்யத்தில் பங்கேற்பாளர்களாக இருப்பதற்கும், அவருடைய விசித்திரமான ஜனங்களாக இருப்பதற்கும், அவர்களின் இருதயங்களை ஆயத்தப்படுத்துவத்றகாக அவர்கள் தேவனால் அழைக்கப்பட்டார்கள். இன்னும், யூத யுகத்தில் மனுக்குலம் இரட்சிப்பை பெறவில்லை.

சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய ஜனங்களை அவர்களை வடிவமைத்தல்

தற்போதைய தீமையான உலகின் மூன்று காலங்களில் கடைசியானது - சுவிசேஷ யுகம். ஆதாமையும், மனுக்குலத்தையும் மீட்கவும், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் அவர்களை ஆசீர்வதிப்பதற்கு ஒரு ஆசாரியத்துவத்தை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். கி.பி 29ல் இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்றபோது இது ஆரம்பித்தது.

"அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்."(மத்தேயு 4:17) அவருடைய வார்த்தைகளைத் தழுவியவர்கள் அவருடைய சீஷர்களானார்கள். ஆயினும், பரிசுத்த ஆவி ஊற்றப்படாததால், அவருடைய உவமைகளையும் தீர்க்கதரிசனங்களையும் அவர்களால் இன்னும் புரிந்துக்கொள்ள முடியவில்லை.

சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில், இயேசுவின் ஊழியத்தின் தாக்கத்தை நாம் கற்றுக்கொள்ளலாம். "மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில் வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி."(யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகன் கூறினார். யோவான் ஸநானகன் அதன் ஆரம்பத்திலேயே சுவிசேஷ செய்தியை அறிவித்தார். (கிரேக்க மொழியில், "சுவிசேஷத்திற்கு" - Strong's 2098 -யூஜீலியன் (*euaggelion*) இதற்கு "இரட்சிப்பின் நற்செய்தி" என்று பொருள்.) எதிர்காலத்தில் அனைவருக்கும் ஆசீர்வாதங்களை அறிவிக்கக்கூடிய நற்செய்தி காலம் இந்த சுவிசேஷ யுகமாகும் : நீதியுள்ள ஒரு இராஜ்யத்தின் போது, கல்வாரியில் இயேசுவின் ஈடுபலியின் மூலம், மனுக்குலம் கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டு, ஆதாமின் கீழ்ப்படியாமையால் இழந்த பரிபூரண வாழ்க்கையை மீட்டெடுப்பதற்கான வாய்ப்பை பெறும்.

இந்த உலகத்திலிருந்து கிறிஸ்துவின் சரீரத்தை வெளியே அழைப்பதே, சுவிசேஷ யுகத்தின் இரண்டாவது அம்சமாகும். ஒருவர் அர்ப்பணிப்பின் வழியாக தனக்குரிய அனைத்தையும் தேவனிடம் ஒப்புக்கொடுப்பது, பரிசுத்த ஆவியினால், முழுமையாக மறுரூபமானால், அவர் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களில் சிலராக தகுதிப் பெறுவார். (2பேதுரு1:3-10) கிறிஸ்துவின் உடன்பங்காளிகளாக இந்த பூமியின் அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிப்பதற்கு உதவிச் செய்வார்கள்.

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான் 14:3) கி.பி 33ல் இயேசு சிலுவையில் அறையப்பட்டதைத் தொடர்ந்து, அவர் தனது இரண்டாம் வருகையின் போது கண்ணுக்குத் தெரியாமல் திரும்புவதற்கு 1800 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆயினும், சுவிசேஷ யுகம் இன்றுவரை தொடர்கிறது. மேலும் கிறிஸ்துவின் சரீரம் நிறைவடையும் வரை தொடரும். சபையைத் தேர்ந்தெடுப்பதற்கான இந்த நீண்ட காலம், நம்முடைய பரலோகத் தகப்பன் அவருடையவர்களுக்காக நிறுவிய உயர் தரத்தை பிரதிலிக்கிறது.

காலம் செல்ல செல்ல, அப்போஸ்தலர்களும் அவ்வாறே செய்தார்கள். அவர்கள் மரித்தபின், கிறிஸ்தவ வரலாற்றில் விரிவான விவரங்கள் எதுவும் வேதவசனங்களில் வெளிப்படுத்தப்படவில்லை. எவ்வாறாயினும், அப்போஸ்தலர் யோவான் (வெளிப்படுத்தல் 2 மற்றும் 3) எழுதிய தொடர்ச்சியான தரிசனங்கள் மற்றும் கிறிஸ்தவத்தைப் பற்றி மதசார்பற்ற கருத்துக்களின் மூலம், உண்மை சபையின் வளர்ச்சிக்கான சோதனைகள், அனுபவங்கள் தொடர்பான பிற தடயங்களும் அறிக்கைகளும் நமக்கு வழங்கப் படுகின்றது. அதே நேரம் நம்முடைய ஆண்டவரின் கவனிப்பும் வழிகாட்டுதலும் இருந்தது.

நமக்கு முன்னால் இருந்த சில உண்மையுள்ளவர்களைப் பொருத்தவரையில், அவர்கள் சமூக மற்றும் மத எழுச்சியின் காலங்களில் வாழும்போது, பூமிக்குரிய விருப்பங்களையும் நன்மைகளையும் இழந்தார்கள்.

ஆதிகால சபையில், யூதர்கள் தொடங்கி,தங்கள் எண்ணங்களையும் செயல்களையும் நியாயப்பிரமாணத்தின் போதனைகளிலிருந்து கிறிஸ்தவத்தின் புதிய தரநிலைக்கு மாற்ற முயன்ற நமக்கு முன்னிருந்தவர்களை கருத்தில் கொண்டு நாம் ஜெயிப்பதற்கு அவர்களால் தூண்டப்படவேண்டும். கசப்பான துன்புறுத்தல்களின் காலங்களில் வாழ்ந்த உண்மையுள்ள பரிசுத்தவான்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது நாம் ஜெயிப்பதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். பாவ மனுஷன் எழுச்சியின் போதும், அரசாங்கத்தின் அதிகாரத்துடன் ஒன்றிணைந்தவுடன் உண்மையான சபை எதற்காக நிற்க விரும்பியதோ அதை அது நீர்த்துப் போகச் செய்தபோது, தேவனுக்கு உண்மையாக இருந்தவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்து ஜெயங்கொள்ள நாம் தூண்டப்படவேண்டும்.

விசுவாச துரோகம் சபையை ஆட்சி செய்யும் போதும், கிறிஸ்தவத்தின் இருண்ட யுகத்திலும் விடாமுயற்சியுடன் செயல்பட்ட நம் சகோதரர்களைப் பற்றி சிந்திக்கும் போது நாம் ஜெயிக்க தூண்டப்படவேண்டும். மதவெறியர்கள் என்று கருதப்படுபவர்களின் திட்டமிட்ட படுகொலைக்கு எதிராக தைரியமாக பேசிய நம் சகோதரர்களை நினைத்து, நாம் ஜெயிப்பதற்கு தூண்டப்படவேண்டும். மந்தமாக இராமல், மாறாக பலியின் உடன்படிக்கை யிலிருந்து (சங்கீதம் 50:5) நம்மை வெளியேற்றத் தூண்டும் பல "பளபளப்பான உலக விஷயங்களால்" சூழப்பட்டபோதும் அவர்கள் செய்த எல்லாவற்றிலும் தேவனுக்கு உற்சாகமாக ஊழியம் செய்தவர்களோடு திரைக்கு இந்த பக்கமான நம் வாழ்நாளில் நாம் இனிமையான அனுபவித்த ஐக்கியத்தினைப் பற்றி சிந்திக்கும் போது நாம் ஜெயங்கொள்ள தூண்டப்பட வேண்டும்.

சுவிசேஷ யுகத்தின் நிறைவு என்பதன் பொருள் என்ன?

ஏதேனில் ஆதாம் வீழ்ச்சி அடைந்து, கிட்டத்தட்ட

6150 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆதாம் தொலைத்த காரியத்தினால் தொடர்ந்து மனித குடும்பம் உபத்திரவப்பட்டு வருகிறது. இருப்பினும், இந்த தண்டனையிலிருந்து மனுக்குலம் விடுவிக்கப்படும் காரியம், ஜனங்களுக்கு ஒரு புதிராகவே உள்ளது. நம்முடைய ஆண்டவரே வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி, ஆனால் வரவிருக்கும் சுவிசேஷ யுகத்தின் நிறைவு, அவருடையவர்கள், அவருடைய மகிமையை பகிர்ந்துகொள்வதற்கும், வரவிருக்கும் மூன்றாம் உலகில் மனுக்குலத்தை நீதியுடன் நியாயந்தீர்ப்பதற்குமான அவர்களுக்கு பெரும் நம்பிக்கையை அளிக்கிறது. (கலாத்தியர் 3:16,29) ஆகையால், எவ்வளவு விரைவாக நம்முடைய அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் நாம் உறுதிசெய்கிறோமோ, அவ்வளவு விரைவாக பூமியின் சோர்வான இரவு முடிவுக்கு வரும்.

"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்." (தானியேல் 12:1) தேவ ஜனத்தின் புத்திரர்கள் இஸ்ரயேலுக்குத் திரும்பி வருகிறார்கள் என்பதற்கு மிகாயேல் (தேவனைப் போன்றவர்) அவர் பிரசன்னத்தின் முதல் கட்டத்தில் அவர்களுக்காக நிற்கிறார் என்பதற்கான சான்றாகும்.

மதம் மற்றும் கொடுங்கோன்மைக்குரிய அரசாங்கம் மேல் வந்திருக்கும் உபத்திரவ காலத்திற்கு உலகப் போர்கள் மந்த நிலைகளே சான்றாகும். கிறிஸ்தவம் குறுகிபோகும் நிலையானது, உண்மையுள்ள சபை நிறைவடையும் தருவாயில் உள்ளது என்பதற்கு சான்றாகும். சுவிசேஷ யுகத்தின் பலன்களின் நிறைவு மிக சமீபமாயிற்று.

இந்த யுகம் நிறைவடைவதை பல சான்றுகள் சுட்டிக்காட்டுகிறது. மனித உரிமைகள், பெண்களின் உரிமைகள், பொருளாதரா சமத்துவம், மத சுதந்திரங்கள் போன்றவற்றுக்கு, முன்பை விட இன்று அதிக விழிப்புணர்வு உள்ளது. கூடுதலாக தானியேல் 12:4இன் அறிகுறிகள் நாளுக்கு நாள் மிகவும் ஆழமாகின்றன. பொய்யான அமைப்பாக இருக்கும் மகா பாபிலோன், இந்த அறுவடை காலத்தில் (வெளிப்படுத்துதல் 18: 1-4) தெய்வீக தயவிலிருந்து தூக்கி எறியப்பட்டது. இதனால் ஜனங்கள் மீதுள்ள தீய தாக்கம் குறைகிறது.

சிதறடித்தல், பின்னர் இஸ்ரயேல் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்படுதல், இவ்விரண்டுமே வேதாகம தீர்க்கதரிசனத்தில் கணிக்கப்பட்டது. கி.பி. 70 ல் எருசலேமுக்கு எதிராக ரோமானிய படைகளை வர தேவன் அனுமதித்தார். ரோமானியர்கள், யூத ஆலயத்தை அழித்து பின்னர் நகரத்தையும் தரைமட்டமாக்கினர். உலகின் ஒவ்வொரு மூலையிலும் யூதர்கள் சிதறடிக்கப்பட்டனர். இருப்பினும், யூத ஜனங்கள் பின்னர் மீண்டும் கூடிவருவார்கள் என்று கணிக்கப்பட்டது. "அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி,ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்."(ஏசாயா 11:11, 12) இவை விரைவில் முடிவடையும் என்பதற்கான சான்றுகள் என்றாலும், சுவிசேஷ யுகம் தொடர்கிறது.

நமக்கு முன்னால் வாழ்ந்த நம்முடைய சகோதரர்களின் வரலாற்றுகளையும் நினைவுகளையும் நாம் எடுத்துச் செல்கையில், நம்முடைய குறுகிய வழியில் வேதத்தின் விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களை நமக்கே சொந்தமாக்கிக் கொண்டு தொடர்ந்து நடப்பதற்கு, அவைகளைப் பற்றிய ஒரு சிறந்த முன்னோக்கையும் நமக்குத் தருகின்றன. நமக்கு முன்னால் இருந்த உண்மையுள்ள சிலரைப் போலவே, சுவிசேஷ யுகம் முடிவடையும் வரை நாமும் மத்தேயு28:20ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளின் மூலம் பலப்படுகிறோம்.

# இன்றைய தீர்க்கதரிசனம்

# ஹாங்காங்கில் புரட்சி

"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்" சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும்? நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும்," (ஏசாயா 61:1,2)

கிமு 206 மற்றும் கிபி 220 க்கு இடையில் ஹான் வம் சத்தின் கீழ் சீனப் பேரரசின் ஒரு பகுதியாக ஹாங்காங் மாறியதாக கருதப்படுகிறது. பிரதான நிலப் பகுதியிலிருந்து பல ஹான் சீனர்கள் ஹாங்காங்கில் குடியேறத் துவங்கினர். தெற்கு சீனாவில் தோன்றிய படகில் -வசிக்கும் சமூகங்களும் அங்கு குடியேறியாதாக கருதப் படுகிறது. 7ஆம் நூற்றாண்டில் மிகவும் செழிப்பாக திகழ்ந்த ஆசிரியர், ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இடையில், வர்த்தகக் கப்பல்களுக்கான பொருட்களை நிரப்புவதற்கான இடமாக ஹாங்காங் பிரதான துறைமுகமாக மாறியது.

1500களில் போர்த்துகீசும், டச்சு மற்றும் பிரெஞ்சு வர்த்தகர்கள் சீனாவின் தெற்கு வந்தனர். ஹாங்காங்கின் அருகில் இருக்கும் மக்காவில் போர்ச்சுகல் ஒரு தளத்தை அமைத்தது.

**அபின் போர்கள் ஆங்கிலேய ஆட்சிக்கு வழிவகுத்தது**

பின்னர் 18 ஆம் நூற்றாண்டில், ஐரோப்பியர்களில் செல்வாக்கை கட்டுப்படுத்தும் வகையில் சீனா அவர்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்தது. இந்தியாவிலிருந்து சீனாவிற்கு வந்த அபினின் வர்த்தகத்தை சீனா தடை செய்த பொழுது பிரிட்டன கோபமடைந்தது. ஏனெனில் இதனால் போதைபொருள் எங்கும் பரவ வழிவகுத்தது. சீன அதிகாரிகள் ஏராளமான போதைப் பொருட்களை கைப்பற்றிய பின்னர், பிரிட்டன் 1840ல் தாக்கி வடக்கு சீனாவை அடைந்து முதல் ஓபியம் போரில் பெய்ஜிங்கை அச்சுறுத்தியது. சமாதானம் செய்யும் நோக்குடன், 1841 ஆம் ஆண்டில் ஹாங்காங் தீவை பிரிட்டனுக்குக் கொடுக்க சீனா ஒப்புக்கொண்டது. இரண்டாவது ஓபியம் போருக்கு பிறகு 1860 ல் கவுலுன் தீப கற்பம் கைப்பற்றப்பட்டது. 1898 ஆம் ஆண்டில் பிரிட்டன் வடக்கே பல பிரதேசங்களுக்கு தனது ஆட்சியை விரிவுப்படுத்தியது. இப்பகுதியை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்தது. புதிய பிரதேசங்களின் குத்தகை காலம் காலபவதியான போது முழு நகரமும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

சீன ஆட்சிக்கு ஹாங்காங் திரும்பியதிலிருந்து அதன் பிரதான நிலப்பரப்பிற்கு அதிக சுயாட்சி வழங்கப் பட்டது. மேலும் அதன் மக்களுக்கும் அதிக உரிமைகள் வழங்கப்பட்டது. இந்த ஏற்பாடு "ஒரு நாடு, இரண்டு அமைப்புகள்" என்று அழைக்கப்பட்டது. இருப்பினும் 2019 ஜூன் மாதம், ஹாங்காங் குடிமக்களை சீனாவின் பிரதான நிலப் பகுதிக்கு ஒப்படைக்க அனுமதிக்கும் ஒரு புதிய முன்மொழிவு உள்ளூர் அரசாங்கம் நிறை வேற்றிய பொழுது எல்லாம் மாறியது. அதிருப்தியாளர்கள் நகரத்தின் சுதந்திரம் பறிபோய் விடும் என்று உணர்ந்து போராட்டத்தை துவங்கினர். ஒப்படைப்பு மசோதாவை இடை நிறுத்த நகரத் தலைவர் கேரிலாம் ஒப்புக் கொண்டார். (இது செப்டம்பரில் திரும்பப் பெறப்பட்டது) ஆனால், முழு ஜனநாயகம் வேண்டியும், காவலர்களின் நடவடிக்கை குறித்து விசாரணை கோரியும் ஆர்ப்பாட்டங்கள் வளர்ந்தன. இந்த மசோதா ஹாங்காங்கின் மீது சீனாவிற்கு அதிக செல்வாக்கைக் கொடுக்கும் என்றும் ஆர்வலர்கள் மற்றும் பத்திரிகையாளர்களை குறிவைக்க பயன்படுத்தப்படலாம் என்றும் அவர்கள் வாதிட்டனர்.

அக்டோபர் ஒன்றாம் தேதி, சீனா 70 ஆண்டு கால கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைக் கொண்டாடியபோது, ஹாங்காங் அதன் மிகவும் வன்முறை மிகுந்த மற்றும் குழப்பமான நாட்களில் ஒன்றை அனுபவித்தது. ஒப்படைப்பு மசோதா இனி ஒரு காரணியாக இல்லை என்றாலும், எதிர்ப்பாளர்களின் கோரிக்கைகள் புதிய அரசாங்கத்திற்கு

அழைப்பு விடுத்தது ஹாங்காங் இயக்கத்தை ஆதரிக்கும் வகையில் போராடடங்கள் உலகம் முழுவதும் பரவின. இங்கிலாந்து பிரான்ஸ், அமெரிக்கா, கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் பேணிகள் நடைபெற்றது. நவம்பர் தேர்தலின் போது, அதிருப்தியாளர்கள் ஹாங்காங்கில் உலகளாவிய வாக்கு ரிமையை நாடினார்கள். ஆனால் மற்றவர்கள் சீனாவிலிருந்து முழுமையான சுதந்திரத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

**நீதிக்கான - குரல்**

நாடுகளிடையே ஏற்பட்ட சர்ச்சைகள் வன்முறை மற்றும் போராகவே மாறியது. பூமியில் வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் விவேகமான மற்றும் நீதியான வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கும் ஒரு நாளை கற்பனைவாதிகள் கற்பனை செய்துள்ளனர். தேவனின் பரிசுத்த ஆவியின் தூண்டுதலின் பேரில் வேதத்தை எழுதும் தீர்க்கதரிசிகள், அத்தகைய நேரத்தை முன்னறிவித்தனர். இது உலக உளவில் ஒரு அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அனைத்து நாடுகளின் மக்களிடமும் நியாயமான மற்றும் நீதியான சட்டங்களை சுமத்தி, உலகளவில் நீடித்த சமாதானத்தை உறுதிப்படுத்தும் என்று விளக்குகிறது.

நீதியின் சிதைவு இருக்காது என்று, உலக அரசாங்கத்தின் கீழ் வரவிருக்கும் இந்த சமாதான காலத்தை குறித்து வேதாகம தீர்க்கதரிசனங்களில் கூறுகிறது. ஏனெனில் இந்த வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யம் ஒரு வல்லமையுள்ள அரசாங்கமாய் இருக்கும். ஒவ்வொரு செயல் பாட்டையும் முழுமையான ஒழுங்கமைப் போடு செய்ய பெலன் பெற்றது. இந்த அரசாங்கத்தை கிறிஸ்துவின் இராஜ்யம் என்று வேதம் குறிப்பிடுகின்றது. ஏனெனில் அவரே அதற்கு தலைவராகவும், ஆட்சியாளராகவும் இருப்பார். ஆனால் அவர் தனியாக இருக்கமாட்டார். ஏசாயா கூறியுள்ள தீர்க்கதரிசனத்தை, கிறிஸ்து லூக்கா 4:18 யில் மேற்கோள் காட்டுகிறார். மேலும் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றியவர் அவரே என்று மூன்று வசனங்களுக்கு பின்னர் கூறுகிறார். "தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும் படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்." (ஏசாயா 9:7) என்று ஏசாயா முன்பே அறிவித்திருந்தார்.

இதனைக் குறித்து வேதாகமத்தில் முதலில் குறிப்பிடுபவர் இஸ்ரயேலரின் மூதாதையரான யாக்கோபு. தனது மரணப் படுக்கையில் தன் மகனை குறித்து குறிப்பிட்ட தீர்க்கதரிசனத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "யூதா பாலசிங்கம், நீ இரை கவர்ந்து கொண்டு ஏறிப்போனாய்; என் மகனே, சிங்கம்போலும் கிழச்சிங்கம்போலும் மடங்கிப் படுத்தான்; அவனை எழுப்புகிறவன் யார்?சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை, நியாயப்பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை; ஜனங்கள் அவரிடத்தில் சேருவார்கள்." (ஆதியாகமம் 49:9,10)

யூதாவை "ஆண் சிங்கம்" என்று சித்தரிக்கும் இந்த தீர்க்கதரிசனம் இந்த அரச கோத்திரத்திலிருந்து தான், ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன் மற்றும் யாக்கோபின் தேவன், வாக்களித்த "வித்து" உருவாகும் என்று கூறுகிறது. இவரே மெசியா மற்றும் ஷைலோ. இவர் யூதாவின் வழியாக வருபவர். கிறிஸ்துவை குறிக்கும் இந்த மிகப் பெரிய இராஜா மற்றும் ஆட்சியாளரின் பிறப்பு மற்றும் இறுதி உயர்வை குறித்து ஏசாயா முன்னறிவித்தார். "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்." (ஏசாயா 9:6) பின்னர் தனது தீர்க்கதரிசனத்தில் ஏசாயா, வரவிருக்கும் இந்த பூமியின் ஆட்சியாளர் யெகொவா தேவனின் "கரம்" என்றும் குறிப்பிடுகிறார். மேலும் இந்த "பரிசுத்த கரம்" எல்லா தேசங்களின் கண்களுக்கு புலப்படும் என்றும் பூமியின் எல்லா முனைகளும் தேவனின் இரட்சிபபை காணும் என்றும் கூறுகிறார். (ஏசாயா 52:10)

"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுதுகொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர். பூமியின் செல்வவான்கள் யாவரும் புசித்துப் பணிந்து கொள்வார்கள்; புழுதியில்

இறங்குகிறவர்கள் யாவரும் அவருக்கு முன்பாக வணங்குவார்கள். ஒருவனும் தன் ஆத்துமா அழியாதபடி அதைக் காக்கக்கூடாதே." (சங்கீதம் 22:27,29) என்று தாவீது எழுதுகிறார். "கர்த்தாவே, உம்முடைய கிரியைகளெல்லாம் உம்மைத் துதிக்கும்; உம்முடைய பரிசுத்தவான்கள் உம்மை ஸ்தோத்திரிப்பார்கள்.மனுபுத்திரருக்கு உமது வல்லமையுள்ள செய்கைகளையும், உமது ராஜ்யத்தின் சிறந்த மகிமைப்பிரதாபத்தையும் தெரிவிக்கும்படிக்கு; உமது ராஜ்யத்தின் மகிமையை அறிவித்து, உமது வல்லமையைக் குறித்துப் பேசுவார்கள். உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது." (சங்கீதம் 145:10-13) என்று யெகோவா தேவனின் இராஜ்யத்தை குறித்து தாவீது கூறுகிறார்.

கடந்த 3400 ஆண்டுகளில் யுத்தமும் அதன் தயாரிப்புகளும் இல்லாமல் 300 ஆண்டுகளுக்கும் குறைவான காலங்களே இருந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். (ஒவ்வொரு நபரும் போரைப் பற்றி தெரிந்து கொள்ளவேண்டியது, கிறிஸ் ஹெட்ஜஸ், 2003) கிறிஸ்துவின் இராஜ்யம் ஆட்சி செய்வதற்கான நேரம் இறுதியாக வரும்பொழுது, அது விரைவில் மனிதர்களிடையே அமைதி, நீதி மற்றும் சமத்துவத்திற்கான ஒரு தரத்தை நிறுவும். **ஆயிர வருட ஆட்சியின் பொழுது**, "ஆதலால் அவர்கள் போய், பின்னிட்டு விழுந்து, நொறுங்கும்படிக்கும், சிக்குண்டு பிடிபடும்படிக்கும், கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாக இருக்கும்." (ஏசாயா 28:17) இந்த உலக இராஜ்யங்களை அழிக்கும்படிக்கு, தேவ இராஜ்யத்தின் அதிகாரம், முதன் முதலில், ஒரு தேசம் உருவானது முதல் இல்லாத ஒரு கஷ்ட காலத்தை உண்டாக்கும். (தானியேல் 12:1, வெளிப்படுத்தல் 2:26,27, மத்தேயு 24:3,21,11, வெளிப்படுத்தல் 11:15) ஆனால் இதன் பின்னர், இந்த அமைப்பானது மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்கான நேரத்தை குறிக்கம். இந்த யுகத்தின் "பரிசுத்தவான்கள்" தேவ இராஜ்யத்தில் 1000 ஆண்டுகளாக கிறிஸ்துவோடு ஆட்சி செய்ய உயர்த்தப்படுவார்கள். மற்றும் பண்டைய தீர்க்கதரிசிகள் "பூமியெங்கும் பிரபுக்களாக நியமிக்கப் படுவார்கள். (வெளிப்படுத்தல் 11:18, சங்கீதம் 45:16)

பின்னர், முழு உலகமும் ஞானம் பெறும், மேலும் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருமே கர்த்தரை தொழுதுக்கொள்ள கற்றுக்கொள்வார்கள். (அப்போஸ்தலர் 3:23) இராஜ்யத்தின் வேலை முடிந்ததும் வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் "அனைத்திலும் அனைத்துமாய்" இருப்பார். (1 கொரிந்தியர் 15:24-28)பாவத்தினால் இருண்ட இந்த இரவில் நிலவிய நீதிக்கான அழுகைகளுக்கு இதுவே உண்மையான பதில் வேதவசனங்கள் எவ்வளவு மகத்தான பதிலை அளிக்கின்றன.